# அருள்நங்கை



புதிய உயர் கலைக் கல்லூரியின்
இயக்குநரும், யாழ் / பேராதனை பல்கலைக்கழகங்களின்
இந்துநாகரீகத்துறை விரிவுரையாளருமான
திருமதி அருள்நங்கை சண்முகநாதன்
அவர்களின்

## சேவைநல பாராட்டு மலர்

09-10-2011

# அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரியின்**
**இயக்குநரும், யாழ் / பேராதனை பல்கலைக்கழகங்களின்**
**இந்துநாகரீகத்துறை விரிவுரையாளருமான**
**திருமதி அருள்நங்கை சண்முகநாதன்**
**அவர்களின்**
**சேவைநல பாராட்டு மலர்**
**09-10-2011**

இதழாசிரியர்கள் உள்ளத்தில்......

**எமது புதிய உயர்கல்லூரியின் இயக்குநரும் குருநாதருமாகிய திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் அகவை நிறைவை இட்டு நடாத்தப்படும் சேவைநலன் பாராட்டு விழாவிற்கு இம்மலரிரை வெளியிடுவதை இட்டு எமது கல்விச் சமுதாயம் பேருவகை அடைகிறது.**


**மலைபோன்ற சோகம் வந்தபோதும் தமது கல்விப்பணியை முழுமூச்சாகக் கொண்டு இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக பல பட்டதாரிகளை உருவாக்கி, இக்கல்லூரியை இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டங்களையும் இந்தியப் பல்கலைக்கழகங்களின் பட்டங்களையும் பெறவைக்கின்ற அம்மையாரின் இம் மலருக்கு ஆசிச் செய்திகளையும், கட்டுரைகளையும் தந்து உதவிய அன்பு உள்ளங்களுக்கு விழாக்குழு சார்பில் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.**

**எமது ஆசிரியரின் கல்விப்பணி மென்மேலும் தொடர புதிய உயர்கல்லூரி விரிவுரையாளர்கள் சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் வாழ்த்துகின்றோம்.**

நன்றி

விழாக்குழுசார்பாக
திரு.மு.சின்னராசா
திருமதி ற. தர்மினி

# சமர்ப்பணம்



துருதுருத்த கவலைகளில்
தூக்கமில்லா நினைவுகளில்
தவிதவிக்க வைத்த எங்கள் உறவே
உங்களுக்கு இன்நூல் சமர்ப்பணம்

# வாழ்த்திடடா அம்மாவை

சந்துதனே! சந்துதனே-எமக்கெல்லாம்
சந்தோஷம் தந்தவனே - எம்டையே
வந்துதித்த வடிவழகே!
வானத்து முழு நிலவே!
வைரத்து ஒளிப்பிளம்பே
வட்டமுகப் பேரழகே.

சிந்தையெல்லாம் உன் நினைவு
சிறகடித்துப் பறக்குதையா-எந்நாளும்
சித்திரவதைசெய்யுதையா
வெந்தணில் வீழ்ந்துவிட்ட
விட்டில் பூச்சியை போல
வெந்துமனம் நோகுதையா

வாராயோ ஒரு தடவை -நாலு
வார்த்தைதான் பேசாயோ
என்அம்மா என்னம்மா
என்அப்பா என்னப்பா
என்றுதான்கேளாயோ?
ஏக்கந்தான் தீராயோ

வரமாட்டாய் ஒரு போதும் -காட்சி நீ
தரமாட்டாய் இனிமேலும் -இப்போ
"வானத்து ராஜா" நீ - உனையிங்கு
வரவே விடமாட்டார் - ஆனாலும்
வானத்தில் இருந்தபடி - என்மகனே இந்நாளில்
வாழ்த்திடடா உன் தாயை

வாழ்த்திடடா அம்மாவை
"வாழ்க" என்று ஒருதடவை -என் மகனே
வாழ்கின்ற போதும் - உன்நினைவால் நாளும்
மாள்கின்ற தாயெனக்கு
அது போதும் அதுபோதும் உனைவந்து
அணைக்கின்ற நாள் வரைக்கும்

உன்னை அரவணைத்து மகிழக்காத்திருக்கும்
உன் அருமை அம்மா

## வாழ்க்கை குறிப்புக்கள்

தந்தையார் :- தம்பாப்பிள்ளை இராசரத்தினம்
தாயார் :- இராசரத்தினம் விசயலட்சுமி.

பிறப்பு :-31.07.1951

சகோதரர்கள் :-பாலபாஸ்கரன், அருள்வேல், கமலநங்கை, இராஜநங்கை, செந்தில்குமரன்,

துணைவர் :-மாணிக்கம் சண்முகநாதன்.

பிள்ளைகள் :-சந்துதன் (அமரர்) தேவசந்துதன், தேவசாத்வீகன்.

கல்வி :- ஆரம்பக்கல்வி ஸ்ரீவைத்தியலிங்க வித்தியாசலை, ஆனைக்கோட்டை

இடைக்கால கல்வி:- முத்துத் தம்பி வித்தியாசாலை, திருநெல்வேலி.

உயர் கல்வி :- மானிப்பாய் மகளிர் கல்லூரி மானிபபாய்.

பட்டப்படிப்பு :- வித்தியாலங்கார பல்கலைக்கழகம், கொழும்பு.

பட்டப்பின்படிப்பு :-காமராஜர் கல்கலைக்கழகம், இந்தியா.

சேவைக்காலம் :-1980 தொடக்கம் இன்றுவரை ஆசிரியராக, விரிவுரையாளராக, இயக்குனராக, கடமையாற்றி வருகின்றார்.

# வாழ்வின் பக்கங்கள்


இளமையில்


தந்தைதாயுடன்


சந்துதனோடு




அன்னை அரவணைப்பில்




பிறந்ததினத்தில்


பிள்ளைகள்


சகோதரங்களுடன்



# கல்லூரி வாழ்வியல்

புதிய உயர் கல்லூரி எனும் எமது நிறுவனமானது ஆரியகுளத்தில் உருவாக்கம் பெற்றது. ஆரம்பத்திலே க.பொ.த.உயர்தர வகுப்பையும் வெளிவாரி பேராதனைப பல்கலைக்கழகப் பட்டபபடிப்பிற்குரிய விரிவுரைகளைப் போதிக்கும் நிறுவனமாக உருப்பெற்றது. அன்று மூன்று நான்கு விரிவுரையாளர்களை மட்டுமே கொண்டு இயங்கி வந்த இந்த நிறுவனம் இன்று க.பொ.த. உயர்தர வகுப்பை நிறுத்தி பட்டப்படிப்பை, பட்டப்படிப்பின் படிப்புக்களைப் போதிக்கும் நிறுவனமாக வழங்கண்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்பு பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்பு என்பவற்றோடு காமராஜர் பல்கலைக்கழகத்தின் உயர்மட்ட படிப்புக்களை இணைப்பு நிறுவனமாகவும் பரீட்சை நிலையமாகவும் இந்த நிறுவனம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிறுவனத்தில் தற்பொழுது 2000 மாணவர்களும், இருபது விரிவுரையாளர்களையும் கொண்ட ஒரு வளம் மிகுந்த நிறுவனமாக விளங்கி வருகின்றது. கடந்த காலங்களில் எமது மாணவர்கள் விகிதாசார ரீதியிலே கூடியளவு பட்டம் பெற்றவர்களாகவும் M.A.›M.Com, PG.DiP முதலான உயர் பட்டம் பெற்றவர்களாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வியை மட்டும் போதிக்கும் ஒரு நிறுவனமாக அல்லாது சமூகத்தின் சேவை கருதி எம் விரிவுரையாளர்களும் மாணவர்களும் இந்த நிறுவனத்தினூடாக சமூக சேவை ஆற்றும் நோக்கின் சமூகசேவை மன்றம் அதற்கான பணிகளை ஆற்றி வருவதும் இது மாணவ சமூகத்திற்கு சமூகக் கடமையை நினைவூட்டும் வகையிலும் அமைந்துள்ளது.

சமய உணர்வு ஊட்டப்படுவதாலும் வழிப்படுத்துவதற்கு ஏதுவான வழிபாட்டு நெறி மாணவர்கள் மத்தியில் வளரவேண்டுமெனவும் நோக்கம் கருதி இந்து மன்றம், கிறீஸ்தவ ஒன்றியம் என்ற அமைப்புக்கள் உருவாக்கம் பெற்று சமய விழாக்களை சிறப்பாக நவராத்திரி விழா, ஒளிவிழா முதலான இந்து கிறிஸ்தவ விழாக்கள் நடைபெற்று மாணவர்களின் சமய சிந்தனை வளர்ச்சிக்கும் உதவிவருகின்றது.

மாணவர்கள் ஆளுமை விருத்திபெற்று சமூக உளவியல் புலப்படும் வகையில் மாணவர்கள் மத்தியிலே உளவியல் பலம் ஏற்படும் நோக்கிலும் மாணவர்கள் புகும் பொழுது புதிய மாணவர்களை வரவேற்கும் விழா, இறுதி ஆண்டு முடித்து செல்லும் மாணவர்கள் பிரிவு உபசார விழா, கடந்து செல்லும் மாணவர்களைக் கௌரவித்து நடப்பாண்டில் கற்கும் மாணவர்கள் நடாத்தும் கௌரவிப்பு விழா, முதலானவையும் அவ்விழாக்களிலே மாணவர்கள் தம் கலைத்திறமைகளை வெளிப்படுத்தக் கூடியகளமாக இவ்விழா நிகழ்வுகள் ஒழுங்காக நடைபெற்று வருவதும் மரபாக உள்ளது.

இது மட்டுமல்லாமல் மாணவர்கள் தம் கல்விக்கு கலங்கரை விளக்குகள் ஆசிரியர்களே என கருதி ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்களைக் கௌரவித்து " ஆசிரிய தினத்தையும்" இந்த நிறுவனத்திலே செயற்படுத்தி வருவதும் மாணவர்களின் நன்றி உணர்வின் வெளிப்பாடாகவும் விளங்குகின்றது. அந்தவகையிலே இன்று எமது நிறுவனத்தில் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் உயர்வகுப்புப் தேர்ச்சி பெற்றவர்களாகவும் (Upper, Lover Class), வருகை விரிவுரையாளர்களாகவும் விளங்குகிறார்கள். அவ் வரிசையில்

திரு. N. குழந்தைவேல்
திரு. E. கந்தசாமி
திரு. S. சயந்தன்
திரு. மு.சின்னராசா
திரு. V. விஜயபாஸ்கரன்
திரு. V.S. விஜயநாதன்
திரு. K. சிதம்பரநாதன்
திரு. S. கமலக்கண்ணன்
திரு. பிறிட்டோ
திருமதி. A.மீரா
திரு. S. பிரணவன்
திரு. K. மங்களேஸ்வரன்

திரு. P. லிகோரி
திரு. P. பிரதீபன்
திரு. S. பிரதீபன்
திரு. T. இராமஜெயம்
திரு. R. கிருஸ்ணதாஸ்
திருமதி. R. தர்மினி
செல்வி கஜேந்தினி
திரு. S. திருக்குமார்

**கற்பித்த விரிவுரையாளர்கள்**
திரு. A. குமாரவேல்
திரு சோ.பத்மநாதன்
திரு கியூபேட் ஆனந்தராசா
திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
திருமதி நிவேதிகா

இக்கல்லூரி உருவாக்கிய கல்வி மான்களும் இந்தக்கல்லூரியில் விரிவுரையாளர்களாக இருந்து சிறந்த முறையில் பணியாற்றிவருவதும் இந்தக் கல்லூரியின் வரலாற்றில் சிறப்பிற்குரிய அம்சமாகும். அந்த வகையில் இக்கல்லூரியில் மாணவனாக இருந்து விரிவுரையாளராக பணியாற்றும் திரு செ.கமலக்கண்ணன் முயற்சியினால் முதன்முதல் வெளிவாரிப் பட்டதாரிகள் மாணவர் ஒன்றியம் உருவாக்கப்பட்டதும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவத்தை இம்மாணவர் ஒன்றியமும் இணைந்து நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.
மேற்குறித்த விரிவுரையாளர்களுடன் நிர்வாக இயக்குநராக கடமையாற்றும் விழாநாயகியின் வாழ்க்கைத் துணைவர் திருவாளர் சண்முகநாதன் பிரதிப் பொறுப்பாளராக விளங்கும் பாலபாஸ்கரன், உதவியாளர்களாக விளங்கும் இரட்ணசிங்கம், சந்திரகாந்தன் ஆகியோரும் சக பணியாளர்களாகப் பணிபுரிந்துவரும் திரு செல்வம் திரு உதயகாந்தன் அஜீத் போன்றவர்களையும் உள்ளடக்கி பெரு நிறுவன அமைப்பாக புதிய உயர்கல்லூரி என்ற விருட்சம் காணப்படுகிறது.
இந்தப் புதிய உயர்கல்லூரி என்ற விருட்சம் தருகின்ற ஒரு பழமாகவே இன்றைய விழாநாயகி திகழ்கின்றார். பல்கலைக்கழகம் இவருக்கு பட்டத்தை தந்திருந்த போதும் இந்த புதிய உயர் கல்லூரியே பட்டத்திற்குரிய தகுதியை வழங்கியுள்ளது. எந்த நிறுவனத்திற்கு சென்றாலும் இந்த நிறுவனம் உருவாக்கிய ஒரு, இரு பட்டதாரிகளைத் தரிசிக்க முடிகிறது. மேலதிக அரச அதிபர்கள், வங்கியாளர்கள், விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் என பல பதவிகளில் இக்கல்லூரி மாணவர்கள் சிறந்த பணியாற்றி வருவதைக்கண்ணுற்று இக்கல்லூரித்தாய் பூரிப்படைந்து கொள்கின்றாள். எனவே கல்லூரி சிறந்த கல்விப் பின்புலத்தைக் கொண்ட விரிவுரையாளர்களைக் கொண்டு விளங்குவதுடன் கல்லூரி மீது பற்றுள்ள நல்ல மாணாக்கர்களையும் கொண்டிருப்பது கல்லூரிக்கு பெருமை சேர்க்கின்றது. இந்த கல்லூரியிலே கற்று பயனடைந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளையும் நம்பிக்கையுடன் கொணர்ந்து சேர்ப்பதையும் பார்க்கும் போது இரண்டு தலைமுறைக்கு இக்கல்லூரியின் கல்விப்பணி விரிவு பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.
இக்கல்லூரிக்கு வழிகாட்டிகளாகவும் இதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிவரும் பல்கலைக்கழக பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் போன்றவர்களின் ஆசியுடன் இதன் பணி வளர்ந்து வருகின்றது. மென்மேலும் வளரும். இந்தக் கல்லூரி பல்வேறு சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கி சாதனை படைத்து வருவது வரலாற்றுப் பதிவாகும். இவை அனைத்திற்கும் காரணகர்த்தாவாக விளங்கும் திருமதி சண்முகநாதன் அருள்நங்கைக்கு விழா எடுப்பதில் இக்கல்லூரிச் சமூகம் பெருமகிழ்வடைகின்றது.

# கல்லூரிக் கீதம்

புதிய உயர்கலைக் கல்லூரி-கல்விப்
புகழ் மணம் பரப்பிடும் கல்லூரி
மதியதை அளித்திடும் கல்லூரி- என்றும்
மங்காப புகழ் கொண்ட கல்லூரி

கலையோடு வர்த்தகம் விரிவுரைகள்
கனிவுடன் வழங்கிடும் அறிவுரைகள்
சிலைதனில எழுத்தாய் சிந்தையிலே
நிலைபெற வைத்திடும் கல்லூரி.

பல்கலைக்கழக நிகர் ஒத்த
பலகலை உலவிடும் கல்லூரி
நல்லென மாந்தர் போற்றிடவே
நலம் பல விளங்கும் கல்லூரி.

மொழியோடு தமிழர் பண்பாடு - இரு
விழி எனக் காத்திடும் கல்லூரி -நல்
வழி ஒனறே நம் வழியாம் என
நாளும் உணர்த்திடும் கல்லூரி.

கலைமாணி முதுமாணிப் பட்டங்களும்
கலைமகள் மடிதவழ் கலைகளையும்
மலை தரும் அருவி நீர்போலே -எங்கள்
மாணவர்களுக்களித்திடும் கல்லூரி.

வளம் புகழ் எழில் கொண்ட யாழ் நகரில்- ஆரிய
குளம் குலவிடும் கரையெதிரில்
வளமுடன் விளங்கும் கல்லூரி - என்றும்
புகழுடன் வாழிய வாழியவே.



# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்
# அருள் ஆசிச் செய்தி

கல்விசார் பெருந்தகையீர்:-

யாழ்ப்பாணம் உயர் கல்லூரி நிறுவனத்தின், இயக்குநரும், யாழ்/பேராதனை பல்கலைக்கழக (வெளிவாரி) இந்து நாகரிகத்துறை விரிவுரையாளரும் ஆன திருமதி. அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள் இன்று மணிவிழா காண்பதனை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். எல்லோரும் கல்வியைக் கற்க வேண்டும் என்கின்ற வகையில் உயர்கல்வி நிறுவனத்தை அமைத்து அனைவரையும் கல்வியாளன் ஆக்கிய பெருமைக்குரியவர். இனிமையாக எல்லோருடனும் பழகி அனைவரின் அன்பையும் பெற்றமை சிறப்புக்குரியது. இறை நம்பிக்கையும், எடுத்த விடயத்தைச் செம்மையாக ஆற்ற வேண்டும் என்கின்ற மனவலிமை, எல்லோரும் ஒழுங்காகப் பணியாற்ற வேண்டும் என்கின்ற மன உணர்வையும் கொண்டவர். இவருடைய பணியின் ஊடாக, இன்று உயர்கலைக் கல்லூரி புதிய கட்டிடம் அமையப்பெற்று புதிய நிலையில் பணியாற்ற அமைந்திருப்பது சிறப்புடையது. இன்று அகவை அறுபதனை அடைந்திருக்கும் அம்மையார் அவர்கள் பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ்ந்து பணியாற்ற வாழ்த்துகின்றோம். இவர்களின் பணியைக் கௌரவித்து விழா எடுத்து சிறப்புச் செய்யும் கல்விசார் சமூகத்தினரை வாழ்த்துகின்றோம்.

திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
இரண்டாவது குரு மஹா
சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

## யாழ்.புதிய உயர்கலைக் கல்லூரி ஸ்தாபகர் அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் சேவை நலனைப் பாராட்டிப் போற்றி வாழ்த்துவோம்.

புதியவுயர் கலைக்கல்லூரி புகழ்பெற நாட்டி வைத்து
அதிசய சாதனை படைத்து ஆண்டிருபத்தைந் தாக
அதியுயர் பெருமையோடு அகவை அறுபது காண்கின்ற
மதியுயர் மங்கை நல்லாள் அருள் நங்காய் வாழிவாழி.


பல்கலைக் கழகம் செல்லும் பாக்கியம் இல்லை யென்று
அல்லலுற் றவர்கட் கெல்லாம் அரும் பெரும் துணையே யாகி
பல்கலைக் கல்வி தந்து பட்டமும் பெறவைக் கின்ற
சொல்பெருஞ் சிறப்பு மிக்க அருள்நங்கை அன்னாய் வாழி.

இந்துநா ரிகத்திற்கிங் கிணையில்லை யெவரு மென்னச்
சிந்தனைத் திறத்தால் கல்விச் சேவையின் தரத்தால் மேன்மை
தந்திரு பத்தைந்தாண்டு சாதனை படைத்து நிற்கும்
எந்தம திதையத் தெய்வம் அருள்நங்கை அன்னாய் வாழி.

ஐயாயிரத்தின் மேலோர் பட்டதாக ரிகளாய் இந்த
வையகம் போற்ற வாழும் வகையிலே கல்வி தந்து
உய்வகை காட்டும் மேலாம் உயர்கலைக் கல்லூரிக்குத்
தெய்வமாய் வந்தாய் அன்னாய் அருள் நங்கை சிறந்துவாழி.

**யாத்தவர்**
சைவப்புலவர், கலாபூசணம்
சு. செல்லத்துரை.

வாழ்த்துவோர்,
மணிவிழாகுழு.



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

கல்விப்பணி கடவுட் பணி. காலமெல்லாம் நன்றியோடு போற்றும் பணி. இப்பணிகளில் ஈடுபட்டவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். யாழ். குடாநாட்டில் அருள்நங்கை சண்முகநாதன் மிகவும் பிரபல்யம் பெற்றவர். பல்கலைக்கழகம் உள்வாரியாகக் கற்கமுடியாது போன மாணவர்களுக்கு கை கொடுத்துதவியவர்களில் இவர் மகத்தானவர். இவரது மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். பல நூறு மாணவர்கள் பட்டதாரியாகச் சிறக்க இவர் ஆற்றிய பணி மறக்க முடியாதது. இந்தியப் பல்கலைக்கழகங்களோடு தொடர்பு ஏற்படுத்திப் பட்டப்பின் படிப்புத் துறைகளிலும் இவரது உயர் கல்லூரி முத்திரை பதித்தமை பாராட்டுக்குரியது. ஏழை மாணவர்களுக்கு இரக்கப்படும் பண்புடைய இக்கல்வியலாளர் சீரும் சிறப்போடும் மேலும் பல்லாண்டு பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் **என்றும் இன்னுரைதானே**"

கலாநிதி ஆறுதிருமுருகன்
தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.

# ஆசியுரை

யாழ்ப்பாணம், ஆரியகுளம், புதிய உயர் கலைக்கல்லூரி இயக்குநர் திருமதி. அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவைச் சிறப்பிக்க வெளியிடப்படும் "மணிவிழா" மலருக்கு ஆசிச்செய்தியை வழங்குவதில் நான் பேருவகை அடைகிறேன்.

1982-83 களில் எனக்கு இந்து மதத்தின் சிறப்பைக் கற்பித்த இவர் இத்துறையில் எனது குரு, இவரிடம் நான்பாடம் கற்றபோது, அம்மையார் கடைப்பிடித்த கற்பித்தல் முறைமையும், இவரிடம் காணப்பட்ட சிந்தனைத் தெளிவும். பண்பான நடத்தையும், பரந்த மனப்பாங்கும் இவர் மட்டில் ஒரு உயர்ந்த மதிப்பீட்டை என் மனதில் ஆழமாகப் பதித்தது. இந்து நாகரிகத்துறையில் மாணவர்களால் அதிகம் வேண்டப்படுகின்ற சிறந்த ஒரு விரிவுரையாளராக அம்மையார் திகழ்கின்றார். இவரிடம் விளங்குகின்ற கடின உழைப்பு, அயராத முயற்சி, பலருடனும் பண்புடன் பழகும் குண இயல்பு இவர் படிப்படியாக வாழ்வில் உயர்வதற்கு உதவியாக அமைந்தன.

தமது கல்வி நிறுவனத்தில் பயிலும் மாணவ மாணவிகளுடன் மரியாதையுடனும், பண்புடனும் பழகும் இவரிடம், கடந்த 25 வருடங்களாக பெரும் எண்ணிக்கையிலான மாணவ, மாணவிகள் பல்துறைசார் பாடங்களை கற்றுத் தம் வாழ்வில் உயர்ந்துள்ளனர். உயர்தர வகுப்பு மாணவர்கள் மட்டுமன்றி, யாழ்ப்பாணம், பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களின் வெளிவாரி மாணவர்களும் கற்பதற்குத் தமது நிறுவனத்தில் வாய்பபை இவர் ஏற்படுத்தியுள்ளார். இன்று கல்வி நிறுவனத்தில் 2000 இற்கும் அதிகமான மாணவர்கள் கற்பது இந்நிறுவனத்தின் சிறப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும், பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பட்டப்படிப்புக்கள் குறித்தும் இந்நிறுவனம் போதிய கவனம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக மதுரைக்காமராசர் பல்கலைக்கழகத்திற்கான முதுகலைமாணி, தஞ்சாவூர் பல்கலைக்கழக விஞ்ஞானமாணி பரீட்சைகளுக்கான கற்கை நெறிகள் இந்நிறுவனத்தில் இடம் பெறுகின்றமை பாராட்டுக்குரியது.

ஆன்மீகம். அறிவு, ஆற்றல், அர்ப்பணம் நிறைந்த எனது ஆசிரியை பல்லாண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து கல்விப்பணியிலும், சமூகப்பணியிலும் சிறந்து விளங்க இவருக்கு இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

பேராசிரியர். வண.ஞா.பிலேந்திரன்,
தலைவர்/கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# வாழ்த்துரை

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இவரது கல்விப் பணியை கௌரவித்தும், ஊக்கமும் கொடுத்தவன் என்ற நிலையில் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். திருமதி அருள்நங்கை யாழ்ப்பாணத்தில் இன்று சிறப்பாகக் கல்வி சேவையை வழங்கும் உயர்கல்வி நிறுவனத்தின் உரிமையாளராகவும், இயக்குநராகவும், கல்வி போதனை செய்பவராகவும் இருக்கின்றார். இந்நிறுவனத்தை ஒரு தனியார் பல்கலைக்கழகம் என்று கூற முடியும். இது கொழும்பில் இயங்கி வருகின்ற பல்வேறு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு ஈடாக இயங்கி வருகின்றதெனலாம்.

யாழ்ப்பாணம் உயர்கல்வி நிறுவனத்தின் மூலம் வருடா வருடம் இங்கு பயிலும் க.பொ.த. உயர்தர மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் பல்கலைக்கழகம் செல்கின்றனர். மேலும் இந்நிறுவனத்தின் மூலம் வருடா வருடம் சராசரி 100 க்கு மேற்பட்டோர் வெளிவாரிப்பட்டம் பெறுகின்றார்கள். இந்நிறுவனம் பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வெளிவாரி பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார் செய்கின்றது. மேலும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பட்டப்பின்படிப்புக்களுக்கு மாணவர்களைத் தயார் செய்கின்றது. இதனால் வருடாவருடம் பலர் மதுரை காமராஜர் பல்கலைக்கழக முதுமானிப்பட்டங்களை இந்நிறுவனத்தின் மூலம் பெறுகின்றனர். இந்நிறுவனம் மிகக்குறைந்த செலவுடன் மிகச் சிறந்த உயர்கல்விப் பணியைச் செய்து வருகின்றது. பல்கலைக்கழக அனுமதியைத் தவறவிட்ட மாணவர்களுக்கும், உயரகல்வியில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும் இந்நிறுவனம் பெரும் வரப்பிரசாதமாக இருக்கின்றது. இந்நிலையை அடைவதற்கு அருள்நங்கையின் மிகக் கடின உழைப்பும் அர்ப்பணிப்புமே காரணங்களாக இருந்தன.

திருமதி அருள்நங்கை தானும் கற்பிப்பதில் சிறந்து விளங்குவதுடன் நல்ல விரிவுரையாளர் அணியை வளர்த்து எடுத்துத் தன்னுடன் வைத்துள்ளார். தனது நிறுவனத்தில் கடமையாற்றும் விரிவுரையாளர்களுக்கு உரிய கொடுப்பனவுகளும் மற்றும் அவர்களின் சுக- துக்கங்களில் பகிர்ந்துகொள்வதால் அவர்களிடம் இருந்து சிறந்த சேவையைப் பெறுகின்ற நிலை காணப்படுகின்றது. ஒரு கல்வி நிறுவனத்தின் முக்கியவளம் அதன் ஆசிரிய வளம் என்பதனை நன்கு அறிந்துள்ளார் என்பது இதனால் தெரியவருகின்றது.

திருமதி அருள்நங்கை மாணவர்கள் மேல் மிகுந்த அன்பும், கண்டிப்பும் கொண்டவர். ஏழை, எளிய மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு பல வழிகளிலும் உதவும் கரமாக இருப்பவர். நல்ல ஆசானாகவும்,

நண்பியாகவும், தேவைக்கு உதவுபவராகவும் இருப்பதால் மாணவர்கள் இவர்மேல் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

கல்வியிலும் நிர்வாகத்திலும், உட்கட்டமைப்பிலும் உயர்கல்வி நிருவாகத்தை வளர்க்க வேண்டும் என்ற நோக்கம்கொண்டவர். இன்று இந்நிறுவனம் மூன்று மாடிக் கட்டடத்தைக் கொண்டு, பல்வேறு வதனத்துடன் சிறப்புப் பெற்று இருப்பதைக் காணலாம்.

திருமதி அருள் நங்கை கல்விப்பணியுடன் சமூக சேவை காணும் பொது நலன்களிலும் தன்னையும், உயர்கல்வி நிறுவனத்தையும் சிறப்பாக ஈடுபடுத்தி நல்ல பணிகள் பலவற்றைச் செய்து வருகின்றார்.

இலங்கை அரசாங்கம் இன்று உயர்கல்வியில் தனியார் பங்களிப்பை குறிப்பாக தரமான வெளிநாட்டுப் பல்கலைக்கழங்களின் பிரவேசத்தை வரவேற்கின்றது. இச்சூழ்நிலையில் உயர்கல்வி நிறுவனம், நல்ல வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றுடன் அல்லது பலவற்றுடன் இணைந்து ஒரு பல்கலைக்கழகமாக மாறமுடியும். இதற்கு தூர நோக்குடன் பல முன் முயற்சிகளும் முதலீடுகளும் தேவையாகும். இவற்றை சாதிக்கக் கூடிய திறமை அருநங்கையிடம் உண்டு. இப்படியொரு பல்கலைக்கழகம் வந்து, இதன் தலைவியாக திருமதி அருள்நங்கை வரவேண்டுமென்று வாழ்த்துகின்றேன். யாழ்ப்பாணத்தில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பட்டப்படிப்புக்களைக் கொண்ட நிறுவனத்தை வளர்த்தெடுத்த பெருமை இவரைச் சாரும். யாழ்ப்பாணத்தின் உயர் கல்விவிருத்தியில் என்றும் திருமதி அருள்நங்கைக்கு உரிய இடமுண்டு. அதை யாராலும் மறைக்கவும் முடியாது. மறுக்கவும் முடியாது.

அன்னாரது பணி மேலும் சிறக்கவும், இவரும் இவரது குடும்பமும் மேலும் சிறப்புற்று நீண்டகாலம் வாழ வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கிறேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.
PHD (DHRHAM) D.Litt(Jaffna)
முன்னாள் துணைவேந்தர் வாழ்நாட் பேராசிரியர்.



# மணிவிழா

திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையின் மாணவர்களில் 2% மாணவர்களே பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுகிறார்கள். அதனை 100% ஆக்கி வெளிவாரி மாணவர்கள் அனைவரும் பட்டம் பெறமுடியும் என்று நிரூபித்தவர் திருமதி அருள்நங்கை ஆவார். இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மாத்திரமின்றி இந்தியப் பல்கலைக்கழங்களிலும் பட்டம் பெறும் தகுதிகாண் மாணவர்களைத் தயாரித்து வருகின்ற பெருமையை மனதாரப் பாராட்டுகின்றேன். பல்கலைக்கழகங்களில் 10 - 20 விரிவுரையாளர்கள் ஒரு பாடத்திற்குரிய மாணவர்களைத் தேர்ச்சி பெறச் செய்கின்றனர். அவ்வாறான வேளையில் ஒரு விரிவுரையாளரே உரிய பாடத்திற்குரிய மாணவர்களை உருவாக்கி பட்டம் பெறவைக்கின்ற திறமை அருள்நங்கையிடம் இருப்பதைக் கண்டு வியந்திருக்கின்றேன். ஆற்றலும், ஆளுமையும் மிக்க அன்னாரை பாராட்டுகின்றேன். வாழ்க்கையில் சகல நன்மைகளும் பெற வாழ்த்துகின்றேன்.

கலாநிதி க.குணராசா.
(செங்கையாழியன்)



# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் -ஆரியகுளம் சந்தியில் அமைந்திருக்கும் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் உயர்கல்லூரி நிறுவனமானது சுமார் 25 ஆண்டுகட்கும் மேலாகத் தமது கல்விச் சேவையினை உயர் கல்வி கற்கும் மாணவர்கட்கு வழங்கி வருவது கல்விக் கழகத்தவர் அனைவராலும் போற்றப் படவேண்டிய விடயமாகும். வருடம் தோறும் ஏறக்குறைய 2000த்திற்கும் அதிகமான மாணவர்கள் யாழ் பல்கலைக் கழகத்திலும், பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் தமது வெளிவாரிப் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு அனுசரனையாக இந்த புதிய உயர்கல்லூரி நிறுவனமானது அவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தி அனுப்புவதால் பெரும் பங்கும்பணியும் ஆற்றி வருகின்றது.

இத்தகையதொரு மாபெரும் கல்விச் சேவைப் பணியினை மாணவ சமூகத்திற்கு வழங்கி வரும் நிறுவனத்தின் தலைவராக விளங்குபவர் திருமதி.அருள்நங்கை சண்முகநாதன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். திருமதி.அருள்நங்கை அவர்கட்கு மணிவிழா எடுத்துப் பாராட்டக் காத்திருக்கும் வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களிடம் பேசிய போது அம்மையார் அவர்களின் சேவைப் பணி அளப்பரிய அன்புள்ளம் கொண்ட நன்றியுணர்வு பூண்ட மாணவமணிகளைப் பெற்றுள்ளார் என்பதனை உணர்ந்தேன். எனது மனம் நிறைந்த அந்த ஒரு திருப்திகரமான உணர்வும் என்னுள் பொங்கி எழுந்து அருள்நங்கையை வாழ்த்த வேண்டும். எப்படி வாழ்த்துவது என்ன சொல்லி வாழ்த்துவது என ஓயாது சொல்லியது. நான் களனிப் பல்கலைக் கழகத்தில் 1974ம் ஆண்டில் உதவி விரிவுரையாளராக இருந்த போது என்னிடம் இந்து நாகரிகம் பயின்ற மாணவர்களில் அருள்நங்கையும் ஒருவராவார். மிகவும் அமைதியானவர், கெட்டித் தனமானவர், துடிப்பாக வேலை செய்ய வேண்டும் என்ற அன்றைய அவரது ஆர்வம் இன்று தனது கணவர் சண்முகநாதனுடன் இணைந்து இத்தகையதொரு பெரும் கல்வி நிறுவனத்தை நடாத்தும் தலைமையையும், தன்னம்பிக்கையையும், பொறுப்புணர்வையையும், வழங்கியுள்ளமை கண்டு பெருமையுடன் அருள் நங்கையின் கல்விப்பணி மற்றும் சமூகப் பணிகளும் சிறப்படைய வாழ்த்துகின்றேன். மேன் மேலும் இன்னும் பலபல மாணவர்களைப் பட்டதாரிகளாக வெளியேற்றி கல்விச் சமுதாயத்திற்கும் அளப்பரிய பணிகள் ஆற்றி வெற்றியும், பெருமையும், புகழும் அடைவதற்கு எல்லாம் வல்ல இறைவனின் பூரண அருள் கிடைக்கவும் பிரார்த்திக்கிறேன்.

புதிய உயர் கல்லூரி நிறுவனத்தில் இந்து நாகரிகம் என்னும் கற்கை நெறியின் 25 ஆண்டு காலமாக கற்பித்து வருவதுடன் அப் பாடநெறியிலே ஆழமான புலமையையும், விசுவாசத்தையும், கொண்ட பலமாணவர்களை, ஆசிரியர்களை உத்தியோகத்தர்களை உருவாக்குவதில் அருள்நங்கை பெரும் வெற்றி கண்டுள்ளார் என்றால் மிகையல்ல. அத்துணை உயர்வினை அருள்நங்கை பெறுவதற்கு உந்துசக்தியாக இருந்த இந்து நாகரிகம் ஆகிய தாய்க்கு மகள் ஆற்றும் கடன் இன்னும் நிறைய இருக்கிறது. தாய் சில சமயம் தவறு செய்தாலும் தாய்தானே என்ற அளவிலா பாசவுணர்வும், தாய்மையுணர்வும் மகளை மீண்டும் மீண்டும் தன்பால் ஈர்க்கும் சக்தியும், வல்லமையும் கொண்ட இந்து என்று தாயானவள் என்ற அதிசயத்தையும், தன்னம்பிக்கையையும் விரைவாக அவர்தம் வாழ்விலே கண்டு கொள்ளத்தான் போகின்றார். இந்து நாகரிகத்திற்கு வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் நிறுவனத்தில் மாணவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்திய அந்த தாயுள்ளத்தை அத்தனை மாணவர்களும் அவர் தனது வாழ்க்கைச் சிக்கலில் இருந்து மறுபிறப்புப் பெற்று திரும்ப வரவேண்டுமென வாழ்த்துவது போல நானும் அவர்களுடன் சேர்ந்து திருமதி.அருள்நங்கை சண்முகநாதன் குடும்பத்தை சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வாங்கு வாழவேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.

"ஆழ்கதீயது - எல்லாம் அரன்நாமமே சூழ்க
வையகமும் துயர்தீர்க்வே"

பேராசிரியர் (திருமதி) கலைவாணி இராமநாதன் M.A.Ph.D.
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம.



# அற்புதமான நங்கை அருள்நங்கை

ஆசிரியர், மாணவர் முதலானோர்கள் அடங்கிய கல்வி உலகம் போற்றும் வகையில் தனக்குள் கொண்டிருக்கும் ஆசிரியத்துவத்தை பிறர் பொருட்டு அர்ப்பணித்து வாழ்ந்து வரும் திருமதி. சண்முகநாதன் அருள்நங்கையை பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஏன் இந்தப் பாராட்டு அவருக்கு வயது 60. அறுபது கடந்தும் ஓர் நல்லாசிரியர் பணிபுரிவது என்பது எல்லோரதும் பாராட்டிற்கும் உரியதே. ஆனால் அவரது தோற்றமும் உறுதிப்பாடும் புலமையும் எடுத்துரைப்பும் அவரை அவ்வாறு காட்டாது பின் தள்ளி வைத்துள்ளன. அவர் என்றும் அருள் பெற்ற இளம் நங்கையாகவே தோற்றமளிக்கிறார். அது கடவுள் அவருக்கு அளித்த நன்கொடை போலும். இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் ஆனைக் கோட்டையைச் சேர்ந்த திரு.திருமதி விஜயலட்சுமி இராசரத்தினம் தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தவர் அருள்நங்கை அவர்கள். தமது இளமைக் கல்வியை யாழ் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலும், உயர் கல்வியை மானிப்பாய் மகளீர் கல்லூரியிலும், பட்டப்படிப்பினை கொழும்பு வித்தியாலங்கார கல்லூரி வளாகத்திலும் பயின்றவர். இவர் களனியா வளகத்தில் பயின்ற பொழுது பேராசிரியர்களான ஆ.சாதசிவம், க.கைலாசபதி, பொ.பூலோகசிங்கம், ச.தனஞ்சயராசசிங்கம், கா.சிவத்தம்பி ஆகியோரிடத்திலும் கலாநிதி திருமதி. மகேஸ்வரி அவர்களிடத்திலும் கல்வி பயின்றார். அத்துடன் அக்காலப் பகுதியில் உதவி விரிவுரையாளர்களாகவும் தற்போதைய பேராசிரியர்களாகவும் விளங்கும் இரா.வை.கனகரத்தினம், திருமதி. கலைவாணி இராமநாதன், திருமதி. நாச்சியார் செல்வநாயகம் முதலானோர்களிடத்திலும் கல்வி பயின்றவர். களனியா வளகத்தில் தமிழ்த்துறையின் நிர்வாக பீடம் ஒரு சிறிய அறையிலே இயங்கியது. அங்கு யாரும் மெல்லப் பேசினாலும் அருகில் இருப்பவர்க்கு கேட்காமல் இருக்காது. ஆனால் அவர் கேட்டும் கேட்காதது போல் இருப்பார். வகுப்பறை மாணவர்களின் கெட்டித் தனங்கள் பற்றி விரிவுரையாளர்கள் கதைப்பது பொதுவான இயல்பு. பேராசிரியர் சதாசிவம் அவர்கள் அருள் நங்கையின் பல்வேறு ஆற்றல் பற்றி அடிக்கடி பேராசிரியர் தனஞ்சயராசசிங்கத்துடன் கதைப்பதை யான் கேட்டிருக்கிறேன். கேட்காதது போல் இருந்ததும் உண்டு.

யான் 1974ஆம் ஆண்டு களனியா வளகத்தில் எனது பேராசிரியர் பெருந்தகை ஆ.சதாசிவம் அவர்களின் நல்லாசியுடன் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றேன். முதல் இந்து நாகரீக பாடத்தில் தேர்ச்சி பெற்ற மாணாக்கன் என்ற வகையில் இப்பாடத்தில் விரிவுரையாற்ற பணிக்கப்பட்டேன். அப்பொழுது என்னிடம் பயிலும் மாணவர்களில் ஒருவராக செல்வி இ.அருள்நங்கை விளங்கினார். அவர் அங்கு மூன்று ஆண்டுகளுக்கு மேலாக என்னிடம் பயின்றார். அக்காலப் பகுதியில் இவர் விரிவுரை வகுப்பு, கட்டுரை வகுப்பு முதலானவற்றிற்கு ஒழுங்காக சமூகமளித்தல், நூல்களைத் தேடுவதில் கட்டுரையை ஒழுங்கு படுத்துவதில், எடுத்துரைப்பதில் திருத்தங்களை மனங்கொள்வதில் மிகுந்த ஆர்வம் செலுத்தினார். இத்தேர்ச்சியின் விளைவாக அவர் அடைந்த பயன் சிறப்புத் தேர்வில் உயர்தர தேர்ச்சி பெற்றமையே ஆகும்.

1978ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு தற்செயலாக அருள்நங்கையை சந்தித்து உரையாட நேர்ந்தது. அவ்வுரையாடலுக்கு இடையில் எனது ஆசிரியர்களுக்குள் ஒருவரான ஞானமணி ஆசிரியரைப் பற்றிக் கூறவந்தார். உடனே யான் இடைமறித்து உமக்கு எப்படி அவாவைத் தெரியும் என்றேன். ஏன் அவர்கள் எனது ஆசிரியர்தானே என்றார். உடனே யான் நீர் முத்துத்தம்பியில் படித்தனீர்தானே? அப்படியானால் யானும் அங்குதான் (1953-1967) படித்தேன். என்னைத் தெரியுமா என்றேன் அவர் இல்லை யென்றார். அப்படியானால் யாரைத் தெரியும் என்றேன். பெடியன்களுள் சிவபாதம், அச்சுதம்

முதலானோர்களைத் தெரியும் என்றார். பெட்டையளுள் யாரைத் தெரியும் என்று திரும்பக் கேட்டேன் அதற்கு அவர் நித்தியலட்சுமி, பவளம் போன்றோரைத் தெரியும் என்றார். அப்படியென்றால் என்னோடு படித்தவர்களைத் தெரியும் என்று சொல்லுகிறாய், வகுப்பில் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் காட்டிய என்னை உனக்கு எப்படித் தெரியாமல் போனது என்றேன். அவர்களைத் தெரிந்ததற்கு வேறு காரணங்களும் உண்டா? என்றேன். அவர் வாயில் இருந்து மெல்லிய புன்னகை குவிந்து மலர்ந்து

அருள்நங்கை தனது புலமைத் திறத்தினால் வாசிப்பால் தேடுதலால் எடுத்துரைப்பால் யாழ்ப்பாணத்தில் இந்து நாகரிகப் பாடத்தை கற்பிக்கும் நல்லாசிரியராகத் திகழ்ந்தார். நல்லாசிரியராய் அதன் மூலம் பெற்ற வருமானத்தின் மூலம் நல்ல நிறுவனம் ஒன்றை நிறுவிக் கொண்டார். 1984இல் நல்ல நிருவாகத் திறமை படைத்த ஏழாலையைச் சேர்ந்த சண்முகநாதன் என்பவரைக் கரம் பற்றினார். அவரின் துணையுடன் அந்நிறுவனத்தை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவனங்களுள் தனித்துவமுடையதாக வளர்த்துக் கொண்டார். இந் நிறுவனத்தின் சிறப்புப் பற்றிக் கூறவந்த

தினக்குரல் 25.09.2011 பின்வருமாறு கூறுவது இங்கு மனங் கொள்ளத்தக்கது.

தாம் ஆரம்பித்து நடத்தும் புதிய உயர் கல்லூரியின் மூலமாக பல்கலைக்ழகத்திற்கு புகும் தகுதிப் புள்ளி இருந்தும் பல்கலைக்ழகத்திற்குள் உள்வாங்கப்படாத மாணவர்கள் மன ஏக்கமின்றி தாமும் பல்கலைக்ழகத்திற்குரிய வகையில் கல்வி கற்கிறோம் என்ற எண்ணப் பாங்குடன் கல்வி கற்க இக்கல்லூரி இடந்தருகின்றது.

இதனைவிட மேலான சிறப்பு என யான் கூறவருவது அருள்நங்கை எனது முதல் மாணவி, எனது பாடசாலையின் சக மாணவி, இத்தகைய உறவுகள் இருந்தும் யான் இந்துப் பண்பாட்டு விரிவுரையாளர், பரீட்சகர் என்றெல்லாம் தெரிந்திருந்த பொழுதும் தனது நிறுவனத்தின் பெருமையை தகுதியற்ற முறையில் வளர்க்க என்னை நாடி அருள்நங்கை ஒரு பொழுதும் வந்ததில்லை யானும் அவரது நிறுவனத்தில் உரையாற்றியதோ வகுப்புக்கள் நடத்தியதோ இல்லை.

திருமதி. அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள் மூன்று பிள்ளைகளுக்கு தாயாவார். தனது மூத்த மகன் சந்துதனின் இழப்பின் மத்தியிலும் கல்விப் பணியினையும் சமூகப் பணியினையும் ஆற்றி வருவது திருவருளின் செயல் ஆகும். தமது கல்விப் பணியினோடு யாழ். திருநெல்வேலி சைவ அநாதை விடுதி (அன்பு இல்லம்) போன்ற தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளின் நலனுக்காகவும் நாவலர், இந்துகோட் சு.இராசரத்தினம், சேர்.பொன்.இராமநாதன் போன்றோரின் கல்வி சமூதாயப் பணிகளை நினைவு கூறுவதன் மூலம் புதிய சமுதாய சீர் திருத்தவாதிகளை உருவாக்கும் வகையிலும் பணியாற்ற திருமதி.அருள்நங்கை சண்முகநாதன் அவர்களுக்கு நல்லருள் புரிய இறைவனை வேண்டி பல்லாண்டு வாழ வாழ்த்தி,

வள்ளுவர்
"தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"
என்றார். இதற்கு அருள் நங்கை புறநடை அல்லர்.அதே சமயம் பிறிதொரு இடத்தில் வள்ளுவன்

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்னும் குறளில் தம்மக்கள் என்னும் அடி பெற்றோரைக் கருதாது ஆசிரிய உலகை கருதுமானால் அவரைக் கற்பித்த ஆசிரியன் என்ற வகையில் மிக மகிழ்ந்து வாழ்த்தவதில் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

அருள் நங்கையின் பணி
வளர்க! வாழ்க!

பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம்
தமிழ்த்துறை
பேராதனை பல்கலைக்கழகம்



# தனித்துவமான ஆளுமை

புதிய உயர்கலைக் கல்லூரியின் நிறுவுனர் திருமதி அருள் நங்கை சண்முகநாதன் அவர்கள் மணிவிழாக் காண்பதையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.பெருமதிப்புக் குரிய ஆசிரியையின் ஆயிரக்கணக்கான விசுவாசமான மாணர்களில் அடியேனும் ஒருவன். அதனை வாழ்வின் பெரும் பேறாகக் கருதுபவன். அம்மையாரிடம் கற்றுக்கொள்வதற்கு நிறையவிடயங்கள் உள்ளன. ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவிடயங்களில் மிகுந்த கண்டிப்பானவர். கற்பித்தற்திறன், விடையதானம் ஆகியவற்றில் மிகுந்த தாடனம் உள்ளவர். இந்துநாகரிகத்தைக் கூட அறிவியற்பாடம் போல மிகத்தெளிவாகக் கற்பிக்கும் திறன் அம்மையாருக்கானது. பழகுவதற்கு மிகவும் இனிமையானவரான அம்மையார் எளிமையானவரும் கூட. அம்மையாரிடம் கற்ற நாட்களை எண்ணுகையில் இன்றும் மனது குதூகலிக்கிறது. வாழ்வின் அனைத்து ஐஸ்வர்யங்களையும் பெற்று அம்மையார் நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

பேராசிரியர்
கி.விசாகரூபன்,
தலைவர், தமிழ்த்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# ஆளுமை மிக்க ஆசிரியை

திருமதி. அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் சேவை நலம் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களது உயர் கல்வியில் எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பதனை நடைமுறையில் செய்து காட்டிய பெருமைக்கு உரியவர் திருமதி அருள்நங்கை அவர்களே. முதலில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இந்து நாகரீகத்தைக் கற்பித்து அதனூடே மிகச்சிறந்த பெறுபேற்றை மாணவர்கள் பெற்றுக்கொள்ள வழியமைத்த அவர் எண்பதுகளில் மாணவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தவராவார். அவரும் நானும் அக்காலப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பித்த காலங்களில் ஏனைய பாடங்களை வேறு நிறுவனங்களில் கற்றாலும், இந்து நாகரீகப் பாடத்தைப் பயில ஆயிரக்கணக்கான மாணவர்கள் திருமதி அருள்நங்கையை நாடி வருவதனைக் கண்டு நான் வியந்திருக்கிறேன். இதற்கெல்லாம் அவரது கற்பித்தல் தொடர்பான ஆளுமையே காரணம் என்பதனை அப்பொழுதே அறிந்து கொண்டேன். இது அவரின் பெயரை மாணவ சமூகத்தவரிடையே பிரபலமடையச் செய்தது மட்டுமல்ல அவரை பட்டப்படிப்புக்குக் கற்பிக்கும் அளவுக்கு விரைவாக உயர்வடைய வைத்தது என்றால் அது மிகையாகாது.

திருமதி அருள்நங்கை அவர்கள் உயர்கலைக் கல்லூரியை வெளிவாரிப் பட்டத்தைக் கற்பிக்கும் முன்னணி நிறுவனமாக மாற்றியதிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வெளிவாரிப் பட்டப்படிப்புக்களைத் தொடரும் மாணவர்கள் அவரை நாடத்தொடங்கினர். இவர் தான் மட்டுமன்றி ஏனைய பாடங்களுக்கும் முன்னணி ஆசிரியர்களை இணைத்துக்கொண்டதன் மூலம் தனது நிறுவனத்தை வெளிவாரிப்பட்டப்படிப்புக்களுக்கான தலைசிறந்த நிறுவனமாக மாற்றினார். இன்று இலங்கையிலும் சரி, வெளிநாடு சென்றவர்களிலும் சரி, பணியாற்றும் பெரும் எண்ணிக்கையான வெளிவாரிப் பட்டதாரிகள் திருமதி அருள்நங்கையின் மாணவர்களே எனக் கூறுவதில் சந்தேகமில்லை.

திருமதி அருள்நங்கை கொண்டிருந்த தலைமைத்துவ பண்பு சக ஆசிரியர்களையும் கல்விகற்கும் மாணவர்களையும் ஒரு குடும்பமாக இயங்கவைத்தது. அவரின் உறவு உயர்கலைக் கல்லூரியை ஒரு பல்கலைக்கழகம் போல் மாற்றுவதற்கு வழிசமைத்தது. இதன் காரணமாக உள்நாட்டுப் பட்டங்களையே பெற்றுக்கொள்ள வாய்ப்பளித்த உயர்கலைக்கல்லூரி காலவோட்டத்தில் சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுவதற்கும் மாணவர்களைப் பயிற்றுவித்தது, இவற்றின் ஊடாக முதல் பட்டங்களையும், முதுமாணிப்பட்டங்களையும், மாணவர்கள் பெறவாய்ப்பேற்படுத்தியவர் திருமதி அருள்நங்கை அவர்களேயாவார். அவரின் கல்விப்பணி தொடரவேண்டுமென வாழ்த்துவதுடன் அவரது குடும்பம் பல்லாண்டு வாழ்ந்து வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

பேராசிரியர்
சு.தேவராஜா,
முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்,



# தொடரட்டும் சமுதாயப்பணி

யாழப்பாண மக்களின் சொத்து கல்வி என்ற வகையிலான ஒரு நீண்டகால பாரம்பரியம் இருந்து வருகின்றது. இந்தக் கல்விப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து தங்கவைப்பதில் திருமதி அருள் நங்கை சண்முகநாதன் தன்னால் இயன்ற அளவு சேவையாற்றியுள்ளார். அவரது கணவர் அவரது இந்த செயற்பாட்டிற்கு ஊக்கமாகவும் உரமளிப்பவராகவம் இருந்து வருவது போற்றப்பட வேண்டியது. வெளிவாரிப்பட்டப்படிப்புக்களில் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்துள்ளார். இத்துறையில் அவரை இந்து நாகரிக விரிவுரையாளராக முதன் முதல் இந்த மண்ணுக்கு அறிமுகப்படுத்தியவன் என்ற வகையில் அவரது கல்வி தொடர்பான கடந்தகால விடயங்கள் நான் நன்கு அறிவேன். அவரோடு இணைந்து ஏறக்குறைய 20 வருடகாலங்கள் விரிவுரை ஆற்றியவன் என்ற வகையிலும் கல்விக்கு அவர் ஆற்றிய பணியை நான் அறிவேன்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் எமது மக்கள் பட்ட அவஸ்தைகளை, அதன் தாக்கங்கள் இன்றும் கூட மழை விட்டும் தூவானம்போகவில்லை என்ற வகையில் தொடருகின்றது. தரப்படுத்தல் என்ற ஒரு தடவையின் ஊடாக உயர்கல்வி வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்டிருந்த நிலையில் எம்மாணவர்களுக்கு அவ்வாய்ப்பைத் தொடர்ந்தும் இடையீறு இன்றியும் வழங்கிவருபவர் அவர். ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்க களம் அமைத்துக் கொடுத்தவர் அவர். பல நிறுவனங்கள் இந்த முயற்சியில ஈடுபட்டபோதும் அவை காலத்தால் அள்ளிச் செல்லப்பட்டோ அல்லது தொடர்ந்து நிலைபெறமுடியாதிருந்த நிலையில் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நிலை என்று கூறக் கூடியவகையில் புதிய உயர்கல்வியை அமைத்துத் தொடர்ச்சியாகக் கல்விப்பணியாற்றிவருகிறார்.

சர்வதேச தொழிற்சந்தையிலும் உள்நாட்டுத் தொழிற்சந்தையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதற்கேற்ப கல்வியின் செல்நெறியை மாற்றியமைக்கவேண்டிய தேவையுள்ளது.ஆனாலும் அதற்கான வாய்ப்புக்கள் வசதிகள், கடந்த கால யுத்த சூழ்நிலையால் எமக்குக் கிடைக்கவில்லை. இன்றும் கூட அந்த வாய்ப்புக்கள் எமது மாணவர்களுக்கு வரைறுக்கப்படவேண்டியுள்ளன.

அவை அதிக பொருட்செலவோடும் தொடர்புபட்டனவாக உள்ளன. எமது இன்றைய மாணவர்களிடையே என்ன செய்வது என்ற ஓர் அங்கலாய்ப்பு உள்ளது. அந்த அங்கலாய்ப்பை ஈடுசெய்யும் வகையில் வெளிவாரிப்பட்டபடிப்புக்களே தஞ்சம் என்ற நிலை மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கல்வியிலே அவர்கள் தஞ்சம் அடைவதற்கு நிழற்குடையாக திருமதி அருள்நங்கை சண்முகநாதன் காணப்படுகின்றார்.

விரிவுரையாற்றுகின்ற போது திருமதி அருள்நங்கை சண்முகநாதனின் குரல் மாணவர்களைப் பொட்டிப்பாம்பாகக் கட்டிப்போட்டுவிடுகின்றது. தான் சார்ந்த பாடத்தின் வளர்ச்சிக்குப்போக்குகள், புதிய எண்ணங்களை, தான் மேலும் மேலும் படித்து மாணவர்களுக்கு அத்துறை சார்ந்த புதிய கருத்துக்களை விதைப்பது அவரது விரிவுரையின் ஒரு இயல்பாகக் காணப்படுகின்றது சமூகத்தின் புதிய எண்ணப்பாங்குகளை தன்னுடைய விரிவுரையோடு இணைத்துக் கூற வேண்டியது ஒவ்வொரு விரிவுரையாளரினதும் கடமையென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஒரு நிறுவனத்தை மிக நீண்ட காலம் நடாத்தி அதன் நிலைபெறச் செய்வது இலகுவான ஒன்றல்ல. பட்டமேற்படிப்பு வசதிகளையும் அவர்காலப்போக்கில் உருவாக்கியுள்ளார். துறைசார்ந்த உயர்வுக்கு வழிசமைத்துக் கொடுக்கின்றார். நலல விரிவுரையாளரை அல்லது ஆசிரியரை மாணவர்கள் தமக்கு மாதிரியாக எடுத்துக்கொண்டு வாழ்வார்கள். இதுபண்டைக்காலம் தொட்டே இருந்து வருகின்ற ஒரு பண்பாகும். திருமதி அருள்நங்கை சண்முகநாதன் பல மாணவர்களுக்கு இன்று மொடல் ஆகவுள்ளார் மாணவர்களின் உள்ளத்திலும் சமூகத்தின் மதிப்பிலும் நிறைந்து நிற்கும் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள் மணிவிழாக்காணும் இச்சந்தர்ப்பத்தில் உங்கள் பணி தொடர்ந்து ஓங்கவும், அதன் மூலம் சமுதாயம் தழைத்தோங்கவும் எல்லாம் வல்ல சன்னதிவேலனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

அ.குமாரவேலு,
இயக்குநர், பட்டதாரிப் பிரிவு,
யாழ்ப்பாணக் கல்லூரி.
யாழ்.பல்கலைக்கழகம்.

# பெருமைக்குரிய சகோதரியின் சேவை தொடரட்டும்

அன்புச் சகோதரி திருமதி அருள்நங்கை சண்முகநாதனுக்கு மாணவர்களால் சேவைநலன் பாராட்டு விழா எடுக்கப்படும்செய்தியறிந்து அகம் மகிழ்ந்தேன். தமக்குத்தாமே விழா எடுக்கும் விந்தை மிகு யாழ்ப்பாணத்தில் மாணவர்கள். தங்களுக்கு வழி காட்டிய ஆசிரியைக்கு அவர்தம் சேவையை உணர்ந்து பாராட்டி மகிழ்தல் என்பது மிக உயர்வான நிகழ்வாகும். முதலிலே மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

"டீச்சர்" என்று அனைவரினாலும் அன்புடன் அழைக்கப்படும் அருள் நங்கை சண்முகநாதனுக்கும் எனக்கும் ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நட்புண்டு. 50 ரூபா சம்பளம் வாங்கிய காலத்து நட்பு. அந்த இனிய நாட்களைப் பின்னர் வந்த நாட்கள் கபலிகரம் செய்துவிட்டது. இன்று ஆயிரக்கணக்கில் சம்பளம் வருகிறது. ஆனால் அன்றைய மகிழ்வைக் காண முடியவில்லை.

அருள்நங்கை டீச்சரின் குடும்பத்தில் நானும் ஒருவன். எந்த இன்ப துன்ப நிகழ்வானாலும் யான் பிரசன்னமாகிக் கலந்துகொள்கின்றேன். அதுபோன்று எனது விட்டு நிகழ்வு டீச்சர் இல்லாமல் நடந்ததில்லை. சண்முகநாதனும் அருள்நங்கையும் நல்ல புரிந்துணர்வுகொண்டவர்கள்.

ஆசிரியசேவை இன்று ஆசிரியத் தொழிலாக மாறிவிட்டது. ஆசிரியர்களைத் தேடி வேண்டியுள்ளது. ஒரு சிலர் மட்டுமே மாணவர்களுக்கு கற்பித்தலுடன் முன் உதாரணத்திற்குரியவர்களாகவும் திகழ்கின்ர்கள். அந்த வகையில் நற்சேவை செய்யும் அருள்நங்கை ஆசிரிய சேவைக்காக தனக்கு கிடைத்த பல

வாய்ப்புக்களை உதறித்தள்ளியவராவார். அரச திணைக்களங்களிலும், இந்து கலாச்சார அமைச்சிலும் பதவி பெறுவதற்கு வாய்ப்பு இருந்தும் அதனை நிராகரித்து மாணவ உலகில் நிலைத்த சேவையைச் செய்ய வேண்டும் என்று கருதினார். மாணவர்களின் உள்ளத்தை வெற்றிகண்டார்.

ஒருவருக்கு பெருமதிப்பு உயர்ந்தவற்றை செய்யக் கருதும் ஊக்கம் மிகுதியே. பிறப்பு எல்லா உயிர்களுக்கும் ஒன்றே. ஆனால் சிறப்பு அவரவர் செய்யும் செயல்களின் பெருமை, சிறுமைக்கு ஏற்பவே வேறுபடும் மேலான நிலையில் இருந்தாலும், மக்கள் மேன்மையான செயல்களைச் செய்யாவிட்டால மேன்மக்கள் ஆகமாட்டார். உறுதியான நிலையில் தம் உள்ளத்தை வைத்துக்கொள்ளும் கற்புடைய பெண்களைப்போல, நம்மை நாமே உறுதிகுலையாமல் தன் மாண்பைக் காத்து வந்தால்தான் பெருமை நிலையாயிருக்கும். பிறர் செய்வதற்கு முடியாத அரிய செயல்களையே பெருமை உடையோர் முறையாகச் செய்துமுடிப்பார். இக்கருத்துக்கள் வான்மறை தந்தவள்ளுவர் பெருமானின் கூற்றாகும். இந்தப் பெருமைக்குணம் கொண்ட அன்புச் சகோதரியின் பண்புகள் நண்பர்களையும் மாணவர்களையும் அவர்பால் தனியான மதிப்புடன் கூடிய பாசத்தை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

“அன்பு நாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மை யொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்.” - குறள் 983

பிறர் மேல் அன்பு, பழிபாவங்களுக்கு அஞ்சும் பண்பு, பொதுநலம், இரக்கம், உண்மைஉரைத்தல் ஆகிய ஐந்துகுணங்களும் சான்றாண்மை என்ற குணமாளிகையைத் தாங்கும் பொருந்தூண்களாகும். இத்தகைய தூண்களால் உயர்ந்த அன்புச் சகோதரியின் சேவை தொடரவும் மாணவச் செல்வங்களின் அன்பு மழையில் நனைந்தபடி இருக்கும் சுகத்தைத் தொடர்ந்தும் பெறவும் இறைவன் திருவருள் நாடிப் பிரார்த்தனை செய்கிறேன்.

தேசபந்,
சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்.



# யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி.
# நெஞ்சம் மறப்பதில்லை

மானி. மகளிரில் கல்வி கற்று தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று கடந்த கால் நூற்றாண்டு காலப்பகுதிக்கு மேலாக கல்வி உலகில் கால்பதித்து இன்று மணிவிழாக் காண இருக்கும் எனது அன்புக்குரிய நண்பி திருமதி சண்முகநாதன் அருள்நங்கையை வாழ்த்துவதில் நான் பெருமையும் மகிழ்வும் அடைகின்றேன். ஆசிரியராகவும் புகழ்பரப்பும் புதிய உயர்கல்லூரியின் இயக்குநராகவும் விளங்கும் இவர் மணிவிழாச் செய்தி கேட்டு உளமார வாழ்த்துவது எனது கடமையும் பணியாகும்.

கல்வி உலகில் இவர் ஒரு கலங்கரை விளக்கு. தொண்டு உலகில் இவர் ஒரு தூண்டா மணி விளக்கு. "மனதில் உறுதி வேண்டும் வாக்கினில் இனிமை வேண்டும் நினைவு நல்லது வேண்டும் என்ற நல்வாக்கிற்கு ஏற்ப இவருடைய வாழ்க்கை அமைந்துள்ளது. இவரை நான் கல்விகற்கின்ற காலத்தில் இருந்தே நன்கு அறிவேன். என்னோடு கற்கின்ற காலத்தில் நட்புக் கொண்டவர். கல்வியையே கருத்தனமாகக் கொண்டு எப்போதும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற அவாவுடன் கல்வியில் சிறந்து விளங்கினார். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் அவரை பல்கலைக்கழகம் வரை கொண்டு சென்றது. அங்கும் சிறப்புப் பட்டங்கள் பெற்று இந்து நாகரிகம் என்றால் அருள்நங்கை என்ற சொல்லுக்கு உரியவரானார். கல்வித்துறை மட்டுமல்ல பேச்சு வண்மையும் இவரிடத்தே நிறையவே உண்டு. சமய சொற்பொழிவுகளை மிகவும் விருப்புடன் ஆற்றுவார். அணை கடந்த வெள்ளம்போல பேச்சு கரைபுரண்டு ஓடும். அந்தளவு சிறப்பான ஒரு சொற்பொழிவாளர் என்றால் மிகையாகாது.

இவ்வாறு அன்பும் பண்பும் ஒழுக்கமும் நிறைந்த எனது நண்பியை இன்று கல்வி உலகம் அவளின் சேவையைப் பாராட்டி மணிவிழாக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதே.. பல்கலைக்கழகம் செல்ல புள்ளிகள் போதாது என்று ஏங்கித் தவித்த மாணவர்களுக்கு புதிய உயர் கல்லூரி ஒன்றை உருவாக்கி பல்கலைக் கல்வியை மாணவர்கள் பெற உதவிய மங்கை அருள் நங்கை பாராட்டப்பட வேண்டியவர். ஆயிரமாயிரம் பட்டதாரிகளை உருவாக்கி அவர்களது நல்வாழ்வுக்கு வழிகாட்டியாக ஒளியாக விளங்கிய நங்கையை நானும் பாராட்டுவதோடு அவரது சேவை மேலும் மேலும் தழைத்தோங்க எனது பாடசாலை முன்றலிலே வீற்றிருக்கும் முருகப்பெருமான் அருள் பாலிக்க வேண்டும். மன அமைதியும் மன நிறைவும் கொண்டு பல்லாண்டு வாழ வாழ்த்தும் அன்பு நண்பியும் மானி மகளிர் கல்லூரியின் அதிபரும்

திருமதி கு.ஜெயவீரசிங்கம்,
அதிபர்
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

# மணிவிழாக் காணும் ஆசிரியைக்கு எனது வாழ்த்துச் செய்தி

மாதா, பிதா, குரு,தெய்வம் என்னும் வரிசையில் தெய்வத்திற்கு முன்னிலையாக ஆசிரியர் விளங்குகின்றார். அந்த வகையிலே எமது மண்ணில் ஆரம்ப காலம் தொட்டு இற்றை வரை தனது கல்விப் பணியினை சிறப்பான முறையில் மேற்கொண்டு வரும் விரிவுரையாளர் திருமதி. அருள்நங்கை சண்முகநாதன் அவர்களது பணி போற்றுதற்குரியது.

இன்று தனது அறுபதாவது வயதில் மணிவிழாக் காணும் ஆசிரியமணி ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரியினை இருபத்தைந்து வருடமாக விரிவுரையாளராகவும், நிர்வாகியாகவும் சிறந்த முறையிலே நடாத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக,பேராதனைப் பல்கலைக்கழக மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்களினை மேற்கொண்டுவருகின்றார். அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் வெளிவாரிப் பட்டம் பெறுவதற்கு உந்து சக்தியாகத் திகழ்கின்றார்.

மணிவிழாக் காணும் ஆசிரியைக்கு இவ்விழாவினையொட்டி வெளியிடப்பட விருக்கும் சிறப்பு மலருக்கு அவரிடம் பட்டப்படிப்பினை மேற்கொண்டவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைவதோடு அவரது கல்விப்பணி மேன்மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க.ஸ்ரீமோகனன்,
உதவி அரசாங்க அதிபர்,
(தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.)
392 41, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



# வாழ்த்துச் செய்தி

சிரேஷ்ட விரிவுரையாளர் சேவையில் வெள்ளிவிழாக்காணும் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அம்மைக்கு வாழ்த்துக்கள்.

எழில் பொங்கும் ஈழவள நாட்டில் சாதனை புரிந்திட்டோர் பலர் ஆவர். அவர்கள் வழி யாழ்ப்பாணத்தின் வடபால் ஆனைக்கோட்டைப் பதியில் வாழும் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் இந்துநாகரிக, இந்துதத்துவ விரிவுரையாளர் வரிசையில் இன்று இருபத்தைந்தாண்டில்வெள்ளிவிழாக்காணும் தங்களை பொன்விழாக்காண வாழ்த்துகின்றேன்.

அம்மையார் தனது பல்கலைப்படிப்பினைத் தொடர்ந்த காலத்திலும் தனியார் கல்வி நிறுவனங்களில் இந்துநாகரிகம் இந்துசமயம் என்ற பாடங்களை கற்றுக்கொடுப்பதில் சளைக்காகத மன உறுதியும் மனத்துணிவும் கொண்ட நிலையில் வடமராட்சி தென்மராட்சி வலிமேற்கு யாழ்ப்பாணத்தின் பல்கலைக்கழகங்களிலும் புகழ்பரப்பிய நங்கையாவார்கள் அறிவறிந்த மக்கட்பேறாகும்.

தனது பல்கலைக்கழகப் பட்டப்படிப்பைப் பெற்று விரிவுரையாளராகப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்தார். அக்காலத்தே அவருடைய ஏழ்மை மனம் யாழ்ப்பாணத்து மாணவர்களின் கல்வியென்னும் பயிருக்கு நீரோடு, பசளை இட்டு வளமான விளைச்சலை பெற்றிட எண்ணிய அன்னையின் சிந்தனையே புதிய உயர்கல்லூரியாக இன்று உலகம் வியக்கும் வகையில் கல்விச் சேவையில் அவர் சாதனையே ஆகும்.

இத்தகைய இனிய சேவையினை வெளிவாரிப்பட்டப்படிப்புக்களை ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் பட்டம் பெற்று பண்புடை தகுதிகாண் கல்வியைக் காண்பித்த நிலையில் காண்கிறோம்.இதனால் மாணவர்களின் நல்ல குருவாகவும், சண்முகநாதனுக்கு நலமான வாழ்க்கைத்துணைவியாகவும், சமூகத்தவர்க்கும் நல்ல நங்கையாய், அன்னையாய்,நண்பியாய் விளங்கிடும் உத்தமியே! அருள்நங்கை "தாரமும் குருவும் அவரவர் தலைவிதிவசம்" என்ற முதுமொழிக்கு ஏற்ப வாழ்ந்து வரும் அன்னையே, வாழ்த்துகிறோம்.

கல்வியூட்டும் காலத்தே ஒரு தாய் எவ்வாறு பாலுஞ்சோறும் உண்ணத்தந்து படிக்கவைத்தாரோ அதே நிலையில் அருள்மழையாய் கருணைகாட்டிடும் நங்கையானவள். "கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்..." என்ற மகாபாரதப்பாடலுக்கு அமைய கல்வியுலகில் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் உள்வாங்கிய நிலையில் தன்னிகரில்லா உயர்மட்ட படிப்புக்களையும் பட்டமேற்பட்டப்படிப்புக்களையும் ஒன்றிணைந்த நிலையில் பல்கலைச் சிகரமாய் மிளிர வைத்த அருள்நங்கை நாயகியே வாழ்க.

கொடிய தீச்சுவாலை சூழ்ந்து புறத்தே எவ்வாறு அழித்து எரித்ததோ அதேபோல் கொடிய துயரத்திலும் அதாவது ஆழ்ந்த துயரச்சமுத்திரத்தில் மூழ்கியபோதும் சமுதாயத்தின் ஒவ்வொரு மனிதனும் தகுதியுடையவனாக தரமுடையவனாகவும் வாழவைப்பது அன்னையின் கடன் இவை எனது கல்விப்புலத்தில் செய்யும் அரும்பணியென கண்டு விழித்தெழுந்து துணிந்து செல் என்றதற்கு தம்பதியர்களாகவே மிடுக்குடன் கம்பனிச் செயற்பாட்டில் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்

என்ற உணர்வுடன் செயலாற்றி வருகிறாரகள். ஒரு மாதாவின் அருட்பார்வைதான் மக்களைச் சான்றோன் ஆக்கும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்"- திருக்குறள்

இதே தாயின் கடமையை இன்று அருள்நங்கை அம்மாவிடம் பார்க்கிறோம்.மேலும் வசிட்டர் இராமயணத்தில் சீதாப்பிராட்டியை கூறும்போது,

"மண்ணினு நல்லவன் மலர் மகள் தன்னிலும் கலையூர்
பெண்ணினும் நல்லன் பெரும் பெயர்ச் சனகியோ நல்லாள்
கண்ணினும் நல்லாள் கற்றவர் கற்றிலாதவரும்
உண்ணு நீரிலும் உயிரினும் உவனையே உவப்பர்"

தசரதன் கேட்டு ஆயிரம் பிறை கண்ட உவகை கொண்டான். ஆயிரம் ஆயிரம் மாணவச் செல்வங்கள் இன்று உவகை கொண்டு வெள்ளிவிழா காணுநிலையில் "ஏழைக்கு எழுத்தறிவித்தவன் இறைவனாவான்." என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து இந்துநாகரிக இந்து தத்துவம் உலகமெலாம் பரந்திடச்செய்த அருள்நங்கை அம்மையின் விரிவுரைப் பணிகள் பொன்விழாகாணும்வகையில் பெருக்கெடுத்து ஓடிப்பெருக உளம் கனிந்து வாழ்த்துகிறேன்.

"ஒருமைக்கண் தான் பெற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையையும் ஏமாப்பு உடைத்து"- திருக்குறள்.

இங்ஙனம்
உளம் கனிந்தவாழத்துக்கள்
எம்.பத்மநாதன்
பொருளியல் கல்லூரி அதிபர்
(யாழ்ப்பாணம் -இணுவில்)
Barathy



# வாழ்த்துரை

முத்தமிழ் ஓங்கி வளர்ந்த புண்ணிய பூமியும் இந்துப் பண்பாடு ஓங்கி வளர்ந்த யாழ்ப்பாணத்து நகரிலே ஆனைக் கோட்டைக் கிராமத்துக்கு பெருமை சேர்ப்பதற்கென தோன்றிய உத்தம திலகம் அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு எமது மாணவர்கள் சார்பில் வாழ்த்துவதில் நான் பெருமகிழ்வடைகிறேன்.

எமது இந்த ஆசிரியை அவர்கள் மேலோங்கிய அறிவு, திடமான நம்பிக்கை, ஆழ்ந்த பண்பாடு, சைவப் பற்றுறுதி, ஞானம் ஆகியவை கைவரப் பெற்றவர். அம்மையார் அவர்கள் தன்னுடைய மாணவர்களை உயர் நிலைக்கு உயர்த்தி அவர்கள் உயர் பதவிகளைப் பெற்று வாழவேண்டும் என அரும்பாடுபட்டுக் கொண்டிருப்பவர். கல்லூரியை உயர் நிலைக்குக் கொண்டு சென்றதுடன் உச்ச வளர்ச்சி பெற்று இன்று இவ்வாறு கம்பீரமாக அழகாக காட்சியளிக்கக் காரணமானவர். கற்பித்தலுடன் தனியே நின்றுவிடாது மாணவர்களின் ஒழுக்கத்தில் மிகவும் அக்கறை கொண்டவர். தனது மாணவச் செல்வங்களுக்கு குறுகிய நேர வரையறைக்குள் பரந்த பாடப்பரப்பான இந்து நாகரிகத்தைச் சிறப்பாகப் போதித்து அவர்கள் நல்ல பெறுபேறுகளை பெற வித்திட்டவர். இந்துநாகரிகம் என்றால் அருள் நங்கை ஆசிரியர்தான். இந்து நாகரிகத்தின் குரல் அம்மையார் குரலே.

இவரிடம் காணப்படும் கனிவான பேச்சு, உயர்வான எண்ணம், தன்னடக்கமான பண்பும் பெருமையும் என சகல நற்பண்புகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு பெண்மணி என்றால் அம்மையார் அவர்களே.

இவர் மேன்மேலும் பல மாணவர்களை பட்டதாரிகளாக உருவாக்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்கிடைக்க வேண்டும். நீடூழி காலம் நித்திலத்தில் நிலையான கல்விச் செல்வத்தை எம்மவர்க்கு வழங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லநாதன். மோகனடாஸ்,
யாழ்ப்பாண பல்கலைக்கழக (வெளிவாரி)
மாணவர்கள் சார்பாக

# திருக்குறளும் பொருளியலும்.

**(அறக்கோட்பாட்டை முதன்மைப்படுத்தும் திருவள்ளுவரது பொருளாதாரக் கோட்பாடு குறித்த நோக்கு)**

பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்,
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சங்கமருவிய காலப்பகுதியில் எழுந்த அற நூல்களில் திருவள்ளுவரினால் இயற்றப்பட்ட திருக்குறள் எனும் நூல் தலையானதாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. இச்சிறப்புக்குக் காரணம் அந்நூலில் உள்ளடங்கியுள்ள பல்துறை சார்ந்த மிகவும் நுட்பமான கருத்துக்களே எனலாம். திருவள்ளுவரை ஆராய்ச்சியுலகம் அறநெறி வளர்த்த பெருந்தகையாகவே பெரிதும் பார்த்திருக்கின்றது. வெறுமனே அறத்தை மட்டுமே முனைப்புறுத்திப் பார்க்காது, அதற்கப்பாலும் பார்ப்பதற்குத் திருக்குறள் இடந்தந்து நிற்பது இந்நூலின் சிறப்பம்சமாகும். இக்கட்டுரையானது திருக்குறளினூடே மேற்கிளம்பும் திருவள்ளுவரது பொருளாதாரம் பற்றிய கருத்துக்களை முறைப்படுத்துவதாக அமைகின்றது.

வள்ளுவரின் பொருளாதாரக் கருத்துக்கள் பலவும் பொருட்பாலிலேதான் பரவிக்கிடக்கின்றன. வள்ளுவர் காட்டும் 'பொருளாதாரம்' அவர் நிலைநிறுத்தியுள்ள ஏனைய அறங்களைப் போலவே எக்காலத்திற்கும் எந்த நாட்டினர்க்கும் பொருந்துவதாக அமைவது குறிப்பிடத்தக்கதாகும். காலத்தாலும் தேசத்தாலும் மாறுபடாது என்றும் நிலைத்திருக்கும் அடிப்படையான கருத்துக்கள் சிலவற்றைப் பொருளாதாரம் தொடர்பாகத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

பொருளாதாரம் குறித்து இன்று நிலவுகின்ற கோட்பாடுகள் அனைத்தையும் திருக்குறளில் பார்ப்பது என்பது முடியாத விடயமாகும். ஆயினும் அடிப்படையான சில விடயங்களைத் திருவள்ளுவர் தந்திருக்கின்றார். 18 ஆம் நூற்றாண்டிலேதான் பொருளாதாரம் என்ற தனித்த ஒரு புலமைத்துறை உருவாகியது எனலாம். அதனைத் தனிக்கலையாக வளர்த்த பெருமை 'ஆடம்ஸ்மித்' என்ற பொருளாதார வல்லுனரைச் சார்ந்ததாகும்.

வாழ்விற்கு இன்றியமையாதனவாய் இருக்கத்தக்கன அனைத்தும் 'பொருள்' என்பது திருவள்ளுவர் கருத்தாகும். திருக்குறள் எழுந்த காலப்பகுதியில் பொருளாதாரம் தனியான ஒரு துறையாக இருக்கவில்லை. அரசியலின் ஒரு உப கூறாக (Sub Unit) அது விளங்கியது.

திருக்குறள் காணவிழைந்த இலட்சிய நாடென்பது பசி, நோய் அச்சம் என்ற மூன்று பெரும் பிணிகளிலிருந்து மக்களை விடுவித்தலாகும். இதனை

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு".

எனக் குறிக்கின்றார். இவ்வாறான இலட்சியத்தை அடைவதற்குரிய பொருளாதாரக் கோட்பாடுகளையும் அவர் வகுத்துத் தந்தார்.

பசிப்பிணிக்கு அடிப்படையானது வறுமையாகும். இதனை உணர்ந்த வள்ளுவர் வறுமையின் கொடுமையினைப் பலவாறு விரித்துக் கூறுகின்றார்.

"இன்மை யெனவொரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்."

என்றும்,

"தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை"

என்றும் வறுமையின் கொடூரத்தை விளக்குகின்றார்.

வறுமை என்பது இரத்தலைக் கொண்டுவரும். 'இரத்தல்' என்பது ஒரு சமுதாயத்தின் இழிநிலையைக் காட்டுவதாகும். இரத்தலை வள்ளுவர் முழுமையாக நிராகரிக்கின்றார். 'நல்லாறு எனினும் கொளல்தீது' என்கிறார் வள்ளுவர். இரந்துதான் உயிர்வாழ வேண்டும் என்பது விதியானால் அந்த விதியை வகுத்தவன் இரந்துண்டு அழிவானாக எனச் சாபம் இடுகின்றார்.

இரத்தலைத் தவிர்க்க விழைந்த வள்ளுவர் அதனைத் தடுக்க அரசியற்சட்டம் எதனையும் வகுக்காது அறச்சட்டத்தினையே வகுத்துள்ளார். சமுதாயத்தின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அன்பால், அறத்தால், அருளால் சமப்படுத்துவதே திருவள்ளுவரின் நோக்கமாக இருந்திருக்கின்றது. நல்லவர்களிடத்தே குவிந்துள்ள செல்வத்தைப் பல்லோர்க்கும் பயன்படுமாறு செலவிடத் தூண்டுகின்றார் வள்ளுவர். அறிவுடையாரிடத்தே காணப்படும் செல்வம் ஊர்நடுவே உள்ள பயன்தரும் பழமரம் போலவும், நீரூற்றுப் போலவும் (ஊருணி) உதவ வேண்டும் என்றும், ஈதலின் இன்பத்தைச்செல்வமுடையவர்கள் உணர வேண்டும் என்றும், பாடுபட்டுத் தேடிய செல்வத்தைப் பத்திரமாகப் பேணிவைக்கக் கூடிய இடம் பசியுடையோர் வயிறே என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். அறிவுடையார்களிடத்தே உள்ள செல்வம் பலருக்கும் பயன்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் திருவள்ளுவர், சகடக்கால் போல வரும் செல்வத்தை அது உள்ளபோதே பிறருக்குக் கொடுத்து சாவாத புகழையும் அறத்தையும் அவர்கள் தேடிக்கொள்ள வேண்டும் என்கிறார்.

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பதனூடே பொருளின் இன்றியமையாத சிறப்பை வள்ளுவர் வற்புறுத்துகின்றார். பகைவரின் செருக்கை அறுக்கும் படை பொருளாதாரமே என்கிறார் வள்ளுவர். மதிக்கத்தக்க மாண்பிலாரையும் மதிக்கப்படுமாறு செய்வது 'பொருள்' என்பது வள்ளுவர் கருத்தாகும்.

பொருள் இம்மைக்கும் மறுமைக்கும் அடிப்படையான விடயம் என்றாலும் அதனை வகுக்கும்போது அறநெறிகளுக்கு உட்பட்டே வகுக்கவேண்டும் என்பது வள்ளுவரது கோட்பாடாகும். அறவழியில் தேடிய செல்வம் அறத்தையும இன்பத்தையும் அளிக்கும். தீய வழிகளிலே ஈட்டப்பட்ட செல்வம் அழிவதுடன் துன்பத்தையும் தரும்.

"அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

என்ற குறட்பா இதனை வலியுறுத்துவதாக அமைகிறது.

பொருள் என்பது வெறுமனே ஓரே இடத்தில் தேங்கிக் கிடக்காது சுழன்றுகொண்டே இருக்க வேண்டும்.செல்வம் அல்லது பொருளின் பயன் என்பது துய்த்தலாகும். தானும் தக்காரும் உற்றாரும் மற்றாரும் நன்கு உண்ணவும் உடுக்கவும் பிறவற்றுக்கும் செல்வம் உதவவேண்டும். பொருளாதாரம் அனைத்திற்கும் அடிப்படை என்பது உண்மையே. எனினும் அது காரணமாக தானும் உண்ணாது பிறர்க்கும் ஈயாது இருப்போரின் மண்ணிற்கே பாரமாக அமைகின்றான். இவ்வாறான பண்புடையோரின் பொருள் அவனுக்கும் அவன் வாழும் நாட்டுக்கும் கேடாகும். அவன் இருந்தாலும் இறந்தவனாகவே கருதப்படுவான் இதனையே

"வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்"

என்ற குறட்பா உணர்த்துகின்றது. ஒரு முழுமையான ஆரோக்கியமான சமுதாயத்தில் வறுமை, இரத்தல், இவறுதல் என்பன இருக்கக் கூடாது என்பது வள்ளுவரின் கருத்தாக இருந்துள்ளது.

ஆரோக்கியமான சமுதாயம் ஒன்றைப் படைத்திட வேண்டுமாயின், மக்களிடையே ஊக்கமும் ஓயாத உழைப்பும் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்தாகும். செல்வம் ஊக்கத்தாலே சேர்வது. முயற்சி மெய்வருந்தக் கூலிதரும். ஊக்கமில்லாச் செல்வன் உண்மையில் வறியவனாவான். ஊக்கமுடையவரே மக்கள் என மதிக்கப்படுவர்.

முயற்சி உடையவனிடத்தே தான் திருமகள் வாசம் செய்கிறாள். மெய்வருத்தம் பாராது, கண்தூங்காது விளையாற்றலே வெற்றி தருவதாகும். இடுக்கண நேர்ந்தபோது அதுகண்டு கலங்காமை வேண்டும். "இடுக்கண் வருங்கால நகுக" என்பது வள்ளுவர் கருத்தாகும். வள்ளுவர் வகுத்துக் காட்டுகின்ற பொருளாதார வாழ்வு ஓயாத உழைப்பு, முயற்சியை அடிப்படையாகக் கொண்டதாகும். கூடவே உலையாத ஊக்கத்தையும்கொண்டதாகும்.

உற்பத்தி அடிப்படைகளாகப் பொருளாதார நூல்கள் நிலம், தொழில் முதல் அமைப்பு ஆகியனவற்றைக் குறிப்பிடுகின்றன. வள்ளுவரும் பொருளாதாரத்தின் முதற்கருவியாக நிலத்தைக் கொள்கின்றார்.

வோளாண்மையை முக்கிய தொழிலாக வள்ளுவர் கொள்கிறார். உழவும் தொழில் மேலோங்கியிருந்த காலத்தே வள்ளுவர் வாழ்ந்தவை காரணமாக உழவுத் தொழிலுக்கு முதன்மை தந்தார் எனக் கருதுவாரும் உளர். ஆயினும் வள்ளுவர் உழவுத்தொழிலுக்கு

முதன்மை கொடுப்பது வேளாண்மை என்பது எக்காலத்திற்கும், எத்தொழிலுக்கும் அடிப்படையாக, அச்சாணியாக அமைந்துள்ளமை கருதியே எனலாம்.

உணவை அடிப்படையாகக் கொண்டதே உலகம். எனவே உணவை படைப்பது மற்றும் பெருக்குவது தொடர்பான முயற்சி என்பது மனிதனின் தலையாய தொழில் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி-அ்.தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

என்பது வள்ளுவர் வாக்காகும். எத்தொழிலைச் செய்யினும் மக்கள் ஏர்த்தொழிலைப் பின்பற்றியே வாழவேண்டியவராவார். உழவே தொழில்கள் அனைத்திலும் தலைசிறந்தது. நெற்கதிர்கள் நிறைந்த நாட்டினை அந்நிய நாடுகள் அடைக்கலமாக வந்தடையும். இவ்வாறான பல்வேறு கருத்துக்களைப் பல்வேறு குறட்பாக்களினூடே குறிப்பிடுவதன் மூலம் உழவுத் தொழிலின் பெருமை மற்றும் அருமையினை வள்ளுவர் விளக்குகின்றார். பாயிரத்தில் 'வான்' சிறப்பை வள்ளுவர் அமைத்ததன் காரணம் உழவுத் தொழிலுக்குச் சிறப்புச் செய்யவே எனக் கூறலாம்.

உழுவாரே கைகட்டி வாழாது தலைநிமிர்ந்து வாழ்வார். ஏனைய தொழில் வல்லார்க்கு இவ்வாறான பொருளாதார சுதந்திரம் இருப்பதில்லை. பண்டைத் தமிழ் அரசு அமைப்புக்கள் கூடப் பயிரத் தொழிலில் தலையிட்டதாகத் தெியவில்லை என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.

உழவுத் தொழிலின் சிறப்பைக் கூறும் வள்ளுவர் அத் தொழில் குறித்த நுட்பங்கள் பலவற்றையும் பலவாறு குறிப்பிடுகின்றார்.

அ). மண்ணைப் பண்படுத்துதல்
ஆ). மண்துகளை உலர்த்துதல்
இ). களையினைக் களைதல்
ஈ). உழுதல் நுட்பம்
உ). எருவிடுதல்
ஊ). நீர்ப்பாய்ச்சுதல்

முதலான உழவுத் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்தும் வள்ளுவர் தனது கவனத்தை ஈர்த்திருக்கின்றார்.

பாடுபடாது, பயிர் செய்த பயனை மட்டும் பெறவிரும்புவோரை விட்டு நிலமகள் நீங்குவாள். போற்றப்படாத மனைவி புலந்து ஊடிவிடுதல் போலச் சென்று ஓம்பிப் பயிரிடாதவனுக்கும் நிலம் தக்க பயனை அளித்தல் இல்லை என்பதனை,

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து
இல்லாளின் ஊடிவிடும்."

என்ற குறட்பா உணர்த்துகின்றது.

வள்ளுவனின் பொருளாதாரக் கோட்பாடு என்பதனுள் நான்கு பிரதான விடயங்கள் முனைப்புறுத்தப்பட்டுள்ளன.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லதரசு."

என்ற குறட்பா இதனை உணர்த்தி நிற்கின்றது. செல்வத்திற்குரிய வழிவகைகளை மக்களுக்கு வகுத்து அளித்தல், அரசாங்கத்திற்குரிய வருமானத்தைத் திரட்டுதல், திரட்டப்பட்ட செல்வத்தைச் சிதையாதவாறு காப்பாற்றுதல், காப்பாற்றப்பட்ட செல்வத்தைத் தக்க வழிமுறைகளிலே செலவு செய்தல் என்பவையே அந்நான்கு விடயங்களுமாகும். இன்றைய அரசியல் பொருளாதாரத்தில் பொது வருமானம், அதனை நிர்வகிக்கும் முறை, செலவிடும் வகை என்ற மூன்று வகையான பிரிவுகளில் இதனை அடக்கிக் கூறுதல் மரபாக உள்ளது.

திருவள்ளுவர் பொது வருவாயைப் பின்வரும் மூன்று பிரிவுகளாகப் பகுத்துப் பேசுகின்றார். அவையானவன:

அ).உறுபொருள் (இயல்பாகவரும் பொருள்)
ஆ).உல்குபொருள் (வற்புறுத்தி வாங்கும் பொருள்)
இ). தெறுபொருள் (பகைவர் நாட்டுப் பொருள்)

உறுபொருள் என்பதற்கு விளக்கம் தரும் பரிமேலழகரும், மணக்குடவரும் அதனை இயல்பாக வரும் பொருள் என்றே குறிப்பிடுகின்றனர். இதன் பிரகாரம் இயல்பாகக்

குடிமக்களால் வழங்கப்படும் பொருள் "உறுபொருள்" என்று அழைக்கப்பட்டது. இத்தகைய பொருளை ஒரு நாட்டின் நிலையான வருவாய் எனக் கூற முடியாது. மக்கள் தமது வருவாயில் ஆறில் ஒரு பங்கை அரசுக்கு வழங்குவது என்பது இந்திய அரசியலில் காணப்படும் வழக்கமாகும். இது குடிமக்களின் கடமையாகவே சுட்டப்படுகின்றது. உள்ளம் நோகாது மன்னர்க்கு மக்கள் தாமாகவே உவந்து இந்த உறுபொருளை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

"உல்கு பொருள்" என்பது வரியைக் குறித்து நிற்கிறது. வற்புறுத்தி வரிவாங்குதலை வள்ளுவர் முற்றிலும் நிராகரிக்கின்றார். வெறுக்கின்றார். குடிமக்களைத் துன்புறுத்தி வரிவாங்கும் மன்னவன் பாலைவனத்தே வேலைக்காட்டி வழிப்பறி செய்யும் திருடனுக்கு ஒப்பானவன் என்பது வள்ளுவர் நிலைப்பாடு. இதனை

"வேலொடு நின்றான் 'இடு' என்றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு."

என்ற குறட்பா மூலம் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மக்களின் பொருளாதார நிலையறிந்து அவர்களின இயல்பறிந்து வரிவாங்குதல் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்தாக இருந்திருக்கிறது.

பண்டைத் தமிழ் மன்னர்கள் தமது வருவாயில் பெரும்பங்கைச் 'சுங்க வரிகள்' மூலமும் திரட்டிக் கொண்டதனைப் பல்வேறு இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள் மூலமும் அறியமுடிகின்றது. பண்டைத் தமிழ் நாடடில் காவிரி, கொற்கை, முசிறி முதலான துறைமுகங்களினூடாகக் கணிசமான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. யவனரின் கலங்கள் துறைமுகத்தில் தரித்து நின்றமை குறித்தும், காவிரிப் பூம்பட்டினத்திலே பண்டங்களில் வியாபாரக் குறி பொறிக்கப்பட்டிருந்தமை குறித்தும் பலவாறு செய்திகள் கிடைக்கின்றன. இச்செய்திகள் எல்லாம் சுங்கவரி மூலம் அரசு பெற்றுக்கொண்ட வருவாயினைக் காட்டுவனாகவே உள்ளன.

மூன்றாவதாக வள்ளுவர் குறிப்பிடும் 'தெறுபொருள்' என்பது மற்றாரை முறியடித்து வலிதிலின் கொண்டுவரப்படும் பொருளாகும். இது வழிவழியாக வந்த வருவாயாக உள்ளது. இன்றைய உலக அமைப்பில் கூட வெற்றிபெற்ற நாடுகள் தோல்வியடைந்த நாடுகளின் பொருளாதார வளங்களைக கொள்ளை கொள்ளும் வழக்கம் இருந்துவருகின்றது. ஈராக் நாட்டின் வளங்களை அமெரிக்கா சுரண்டிவருவதனை இதற்கான வகைமாதிரியான உதாரணமாகக் கொள்ளலாம்.

'இயற்றல்' என்ற சொல்லின் மூலம் அரசாங்கமே பொருள் வருவாய்க்குரிய உபாயங்களை வகுக்கவேண்டும் எனத் திருவள்ளுவர் கருதியதாக உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆயினும் நாட்டின் பொருள் வருவாய் பெருகுதற்குரிய நல்ல சூழலை அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்தாக இருந்திருக்க வேண்டும். இதனையே "இயற்றுதல்" என்ற சொல்லின் மூலம் அவர் உணர்த்தியுள்ளாரெனலாம்.

வள்ளுவர் வரவு-செலவுத் திட்டம் குறித்தும் கவனம் செலுத்தியிருக்கின்றார். அரசாயினும், தனிப்பட்டவர்களாயினும் அவரவர் வருவாய்க்கு ஏற்ப செலவு செய்ய வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்தாக இருந்திருக்கிறது. வரும்வழி சிறியதாயினும் தீங்கில்லை. அது செல்லும் வழி பெரிதாகாவிடின். இதன் மூலம் அளவறிந்து வாழ்தலை வள்ளுவர் வற்புறுத்துகின்றார். அவ்வாறு அறியாது செலவு செய்பவனுடைய வாழ்க்கை உள்ளது போல் தோன்றி விரைவில் அழிந்துவிடும். இதனை,

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்." என்ற குறட்பா மூலம் உணர்த்துகிறார்.

'வகுத்தல் என்பது பொருளை அல்லது வருமானத்தினைச் செலவிடும் வகைக்குப் பிரித்தலாகும். பண்டைத் தமிழ் மன்னர்கள் அரசு நிதியின் ஒரு பகுதியினை அறப்பணிகளுக்கென ஒதுக்கி வந்தனர். இப்பணியினூடே இறைபணிக்கும் ஏழைகளுக்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. வருமானத்தின் பிறிதொரு பகுதி படைகளைப் பேணுவதற்காக ஒதுக்கப்பட்டது. பிறிதொரு பகுதியைச் சமுதாயத்தின் நன்மை கருதி குளம் வெட்டுதல், சாலை வசதியைப் பெருக்குதல், சோலைகள் முதலானவற்றை அமைக்கச் செலவிட்டனர்.

முடிவுரை

திருக்குறளில் அமைந்துள்ள பல்வேறு குறட்பாக்களினூடே பொருளாதாரம் குறித்த வள்ளுவரது சிந்தனைப் போக்குகளை அறிந்துகொள்ள முடிகின்றது. பொருளாதாரத்தின் அடிப்படையான அம்சங்களை முறைப்படுத்துவதில் கிரேக்க வல்லுனர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோருடன் ஒப்பிடத்தக்க வகையில் வள்ளுவர் காணப்படுகின்றார். பிளேட்டோ விபரிக்கும் பொருளாதார அமைப்பு கொடுங்கோல் அரசுக்கே உகந்ததாகிறது. அரிஸ்டாட்டில் பொருளாதாரத்தினுள் சாதி உயர்வு தாழ்வை முதன்மைப்படுத்துகின்றார். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற கொள்கையை உடையவரான வள்ளுவரது பொருளாதாரக் கோட்பாடு அறத்தை அடிப்படையானதாகக் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சாணக்கியர் தரும் பொருளாதாரக் கோட்பாட்டில் அரசனுக்கு முறை பெரிதென்று, முடிவே பெரியது என்ற கோட்பாடு முனைப்புறுத்தப்படுவதனையும் இவ்விடத்தில் ஒப்பு நோக்குதல் வேண்டும். வள்ளுவர் தனிமனிதனின் பொருளாதார உரிமையினை வற்புறுத்தினார். கூடவே சமுதாயத்திற்கு அவன் ஆற்றவேண்டிய கடமைகளையும் வற்புறுத்தினார் என்பது இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.

துணை நின்ற நூல்கள்:

01.திருக்குறள்-மூலமும் பரிமேலழகர் உரையும்,
திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1948.
02.கைலாசபதி க., சமூகவியலும் இலக்கியமும்,
சென்னை, 1979.
03.வேலுப்பிள்ளை ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்,
பாரி புத்தகநிலையம், சென்னை 1969.
04.கைலாசபதி க., பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்,
பாரி புத்தகநிலையம், சென்னை. 1966.
05.சிவத்தம்பி கா., தமிழில் இலக்கிய வரலாறு,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1990.
06.விசாகரூபன் கி., சங்க இலக்கியம்: பதிவும் பார்வையும்,
மலர் பதிப்பகம், கந்தர்மடம், 2008.
07.இராசமாணிக்கனார் மா., தமிழ்மொழி இலக்கிய வரலாறு
பாரதி நிலையம், சென்னை, 1963.
08.குழந்தைசாமி வா.செ., வாழும் வள்ளுவம்,
பாரதி பதிப்பகம் சென்னை,1987.

# காலத்தின் பதிவுகள்




























# வடமாகாணத்தின் அபிவிருத்தியும் கைத்தொழில் வாய்ப்புக்களும

V.S. விஜயநாதன்
விரிவுரையாளர்,
புதிய உயர் கல்லூரி.

இலங்கையின் நிலப்பரப்பில் மிகப்பெரிய மாகாணங்களில் ஒன்றான வடக்குமாகாணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு,மன்னார் மற்றும் வவுனியா ஆகிய ஐந்துமாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இது நிலப்பரப்பில் 8884 சதுர கிலோமீற்றர்களை உள்ளடக்கி நாட்டின்மொத்த நிலப்பரப்பில் 13.6 சதவீதத்துக்கு வகை கூறுவதுடன் எறத்தாழ 1.3மில்லியன்மதிப்பிடப்பட்ட சனத்தொகையினைக்கொண்டுநாட்டின் மொத்தசனத்தொகையில் எறத்தாள 6.5 சதவிகிதமாகக் காணப்படுகின்றது.

வடக்குமாகாணம் வளமான வேளாண்மை நிலங்கள், கனிப்பொருள் தாதுக்கள் ,காடுகள், புதர் நிலங்கள், ஈரநிலங்கள் அழகிய கடற்கரைகள், நாடு முழுவதிலும் உள்ள கடல்களில் உள்ளார்ந்த வளம் மிக்க அதி உயர் மீன் அடர்த்தியினையும் பவளப்பாறை படிவத்தையும் கொண்ட திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு வரையான கரையோர ஆழமற்ற கடல் போன்ற இயற்கை வளங்கள் பலவற்றால் செழிப்புற்றிருக்கின்றன. எனினும் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக வடக்குமாகாணம் உள்நாட்டு முரண்பாட்டு சூழ்நிலைகளினால் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த பிரதேசத்தில் பொருளாதார செயற்பாடுகளில் அரசின் தலையீடு கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. வடக்குமாகாணத்தில் நீண்ட காலமாக நிலவி வந்தமுரண்பாடு இந்தப் பிரதேசத்தின் கணிசமான அளவு அழிவினைக் கொண்டுவந்துள்ளது. இதுபாரிய எண்ணிக்கையான குடும்பங்களின் புலம்பெயர்வு, பெருமளவு பாதிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சி வசதிகள் , அடிப்படைஉட்கட்டமைப்பு வசதிகளின் அழிவுகள் உற்பத்தித்திறன் வாய்ந்த சொத்துக்களினதும் கட்டங்களினதும் அழிவு மற்றும் வேளாண்மை,கால்நடை, மீன்பிடி, சிறுகைத்தொழில் அது போல சுகாதார மற்றும் கல்விப் பணிகள் போன்ற முக்கிய பொருளாதார செயற்பாடுகளது கணிசமான அழிவு போன்றவற்றினால் தெளிவாகப் புலப்படுகின்றது.

1980 களின் ஆரம்பத்தில் முரண்பாடுகள் தீவிரமடைவதற்கு முன்னர் குறிப்பாக வேளாண்மையும் கால்நடையும் மீன்பிடி உள்ளிட்ட முழு மொத்த பொருளாதாரத்தில் வடமாகாணம் ஒரு முக்கிய பங்கை வகித்து. கிடைக்கக் கூடியதாக இருந்த வளங்களை பயனுறும் வகையில் பயன்படுத்தியது. மேலும் நிருவாக மற்றும் வியாபார துறைகளிலுள்ள தொழில் வல்லுனர்கள் போன்ற உற்பத்தித்திறன் வாய்ந்த மனிதவளங்களை அபிவிருத்தி செய்வதிலும் இந்த மாகாணம் சிறந்து விளங்கியது. பயங்கரவாத செயற்பாடுகள் தீவிரமடைவதற்கு முன்னர் சிறிய தயாரிப்பு மற்றும் ஆடைகள் போன்ற சிறியளவிலான கைத்தொழில்களும் காணப்பட்டன. எனினும் மாகாணத்திலிருந்த பெருமளவிலான கைத்தொழில்களும் காணப்பட்டன. எனினும் மாகாணத்திலிருந்த பெருமளவிலான உட்கட்டமைப்பு வசதிகள் முரண்பாடுகளினால் அழிக்கப்பட்டுள்ளமையால் வட மாகாணத்திலிருந்த வளங்களின் பாவனை விரைவாக குறைவடைந்து மக்களின்வருவாய் உழைக்கும் இயலளவினையும் குறைத்தது. வடக்கு பொருளாதாரத்தை தரமுயர்த்துவதில் உள்ள முக்கிய தடைகளில் ஒன்று நாட்டின் தென்பகுதியுடனான கிரமமான இணைப்பு காணப்படாமை ஆகும்.

பொருளாதார செயற்பாடுகளின் படிப்படியான குறைவினைத் தொடர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தமாகணத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக குறைவடைந்து 2007இல் 2.9 சதவீதத்திற்கு மட்டும் வகை கூறியது. இது உள்ளார்ந்த மட்டத்தினை விட கணிசமான அளவு தாழ்ந்ததாகும். 2005 இல் குடித்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தினால்

நடாத்தப்பட்ட ஒரு அளவீட்டின் படி வடமாகாணத்தில் மாதமொன்றுக்கு வீட்டுடமையாளரின் சராசரி வருமானம் தேசிய சராசரியான ரூ 20,048 உடன் ஒப்பிடுமிடத்து மாதமொன்றுக்கு 16,725 ஆக காணப்பட்டது. சிசு மற்றும் மகப்பேற்றுஉயிரிழப்பு போசாக்கின்மை போன்ற ஏனைய சமூக பொருளாதார குறிகாட்டிகளும் முரண்பாட்டினால் வடமாகாணத்தில் மோசமடைமந்து முழு மாகாணமும் பயங்கரவாதத்தில் இருந்து விடுவிக்கப்பட்டமை இந்தப் பிரதேசத்தின் வாய்ப்புக்களை புதுப்பிப்பதற்கு பொன்னான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. எனவே கிழக்குமாகாணத்தைப்போன்று இந்த மாகாணத்திலும் இழந்த சுபீட்சத்தை மீண்டும் கொண்டுவருவதற்கான அனைத்தையும் உள்ளடக்கியதொருஅபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியமாகின்றது.

அரசாங்கத்தின் அனைத்தையும் உள்ளடக்கிய அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டமான ரூ.2,112 மில்லியன் செலவிலான ரண்டொர் வில் மன்னார் பாலத்தின் கட்டுமானம் மற்றும் ரூ11,800 மில்லியன் செலவிலான யாழ்ப்பாணத்தின் நீர் வழங்கல் செயற்திட்டம் போன்ற பல்வேறு செயற்திட்டங்கள் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்டுள்ளன.

2009இல், வட மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளிற்காக வெவ்வேறு அமைச்சுகளினூடாக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய அபிவிருத்தி செயற்பாடுகள் கமநெகும (கிராம மீளெழுச்சி) செய்திட்டம், மன்னார் பாலத்தின் கட்டுமானம் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் மகநெகும செயற்திட்டங்கள் போன்வற்றை உள்ளடக்குகின்றன. வடமாகாணத்தினை மீள கட்டமைப்பதற்கான அபிவிருத்தி செயற்திட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற செயன்முறைகளில் வட மாகாணம் சபையும் ஈடுபட்டுள்ளது. எனினும் வடமாகாணத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை விரைவுபடுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்து உள்ளது.

இதன் தொடர்பில் அரசாங்கம் அதன் 2009 இன் வரவுசெலவு திட்டத்தில் இம் மாகணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி வடக்கின் வசந்தம், வடக்கின் மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் என்ற அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டத்தை அறிவித்திருந்தது. இதன்படி இந்த நிகழ்ச்சித்திட்டம் முதலில் மக்களை மீளக்குடியமர்த்துதல், வாழ்வாதாரங்கள் மற்றும் நீர்வழங்கல் சுகாதாரம்,மின்வலு,கல்வி வசதிகள் போன்ற அடிப்படை தேவைகளை மீள ஏற்படுத்துவதற்குப் பொருளாதார உட்கட்டமைப்பின் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மானம் மற்றும் மாகாணத்தில் வருமானத்தை உழைக்கும் செயற்பாடுகளை உருவாக்கல் என்பவற்றை நோக்காகக் கொண்டுள்ளது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் புகையிரதப்பாதை மற்றும் பெருந்தெருக்களையும் பாடசாலைகள் வைத்தியசாலைகள் அரச அலுவலகங்கள் மற்றும் ஏறத்தாழ 80,000 வீடுகள் போன்றவற்றை மீளக்கட்டமைப்பது இந்தத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பிரதேசத்திலுள்ள குழந்தைகள்'. பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு புனர்வாழ்வளித்து அவர்களைச் சமூகத்தில் பயனுள்ள பிரசையாக உருவாக்குவதும் முன்னுரிமைகளாக அமையும். இந்த முயற்சிகளோடு தேசத்தை கட்டியெழுப்புவதற்கும் மலைநாட்டு உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான நலன்புரி வசதிகளை வழங்குவதும் மீளக்கட்டமைப்பு மற்றும் மீள் குடியேற்ற செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்குமாக ரூ 3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ள வேளையில் வடமாகாணத்தில் மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டங்களைக்கொண்டு நடாத்துவதற்காக ரூ500 மில்லியன் தொகை மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரணப்பணிகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தேவயையான பாதுகாப்பு நடைமுறைகளைப் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட உள்ள வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்டகால அபிவிருத்திக்கான முன்னுரிமைகளை இறுதிப்படுத்தும் செயன்முறையில் தொடர்புபட்ட நிறுவனங்கள் தற்போது ஈடுபட்டுள்ளன. இந்தநிகழ்ச்சித்திட்டத்தைநடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய கடப்பாடு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மலைநாட்டு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்றவதற்குமான அமைச்சின் கீழ் வடபிராந்திய அபிவிருத்திப் பிரிவு என்ற புதிய பிரிவு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. இதன்படி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் தயாரித்தல் நடைமுறைப்படுத்தல்

ஒருங்கிணைத்தல் கண்காணித்தல் முன்னேற்றத்தினைமீளாய்வுசெய்தல்மற்றும் நடவடிக்கையைப்பின்தொடர்தல் இந்தப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளன. வடமாகாணத்தின் மொத்த அபிவிருத்தியினைக் கையாள்வதற்கான சமூக மற்றும் பொருளாதர கட்டமைப்பு பொதுப்பணிகள் மற்றும் கலாச்சார விடையங்களை உள்ளடக்கியதானதொரு பல துறைகளை உள்ளடக்கிய அபிவிருத்திச் செயன்முறை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கையாளப்படும். வடமாகாணத்தின் அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித்திறன் வாய்ந்த செயற்பாடுகளை தொடங்குவதற்கான நிறுவன ரீதியான தடைகள் படிப்படியாக தீர்க்கப்படும்.தொடர்புபட்ட அமைச்சுக்கள்மற்றும்அபிவிருத்திபங்காளிகளுடன்அபிவிருத்தி செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பும் தேசத்தைக் கட்டி எழுப்புவதற்குமான அமைச்சினால் நிறைவேற்றப்படும் முழு மொத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவினை மதிப்பிடுதல் நடைபெற்று கொண்டிருப்பதுடன்இனங்காணப்பட்டசெயற்திட்டங்களை நிதியிடுவதற்கான அபிவிருத்தி பங்காளர்களின் உதவி பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்நாட்டில் புலம்பெயர்ந்த சில மக்கள் ஏற்கெனவே விசேட முகாம்களுக்குள் வந்துள்ளதுடன் ஒரு உடனடி நடவடிக்கையாக அரசு அவர்களிற்கு அடிப்படைத் தேவையான உணவு, நீர், ஆடைகள், சுகாதாரம் மற்றும் புகலிடம் போன்றவற்றை சர்வதேச நிறுவனங்களினதும்பொது மக்களினதும் ஆதரவுடன் தொடர்ந்தும் வழங்கிவருகிறது. ஆரம்பத்தில் கல்விவசதிகளும் தற்காலப் பாடசாலைகளில் வழங்கப்பட்டுவருகின்றன.

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், ஒருகுறுகிய வழிமுறையாக உள்நாட்டில் புலம்பெயர்ந்த மக்களுக்காக அரை நிரந்தர வீடுகளை நிர்மானிப்பது ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. அரசால் நிரந்தர குடியேற்ற ஒழுங்கு முறைகள் மேற்கொள்ளும் வரை தற்காலிக முகாம்களிலுள்ள உள்நாட்டில் புலம்பெயர்ந்தமக்கள்அவ்வீடுகளில் குடியமர்த்தப்படுவர்.

மக்களின் வாழ்வாதரங்களை மீள எற்படுத்துவதற்கு மீன் பிடி, வேளாண்மை, வேளாண்மை பதனிடல், பனை,தெங்கு மற்றும் மரமுந்திரிகை பயிரிடுதல் போன்றவற்றை உள்ளடக்கி கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட நுண்பாக கைத்தொழில்களை முக்கிய அமைப்பாகக் கொண்ட பல்வேறு ஊக்குவிப்புத்திட்டங்கள் நடுத்தர காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. கூட்டுறவு அமைப்புக்கு அதிகாரமளிப்பதற்கும் இந்த மாகாணத்தில் உள்நாட்டு நிர்வாகத்திற்கு புத்துயிர் அழிப்பதற்கும் முன்னுரிமை அழிக்கப்படும் தெருக்கள் மீளக்கட்டமைக்கப்படுவதுடன் மின் வலுவை கடத்துவதற்கும் பகிர்ந்தளிப்புகளுக்குமான வலையமைப்புகள் மீள ஏற்படுத்தப்படும்.நீண்ட காலத்தில் இப்பிரதேசத்தில் விரைவில் நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்கெனவே அடையாளம் காணப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களான கண்டியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கின்ற நெடுஞ்சாலை,யாழ்ப்பாண நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்கள், மன்னார் பாலம், வவுனியா, கிளிநொச்சி மின்கடத்தல் செயல்திட்டம் மற்றும் யாழ் பல்கலைக்கழகத்தை விஸ்தரித்தல் போன்றவற்றை விரைவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

வட மாகாணத்திலுள்ள பரந்தவீச்சிலான இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி முக்கிய தொழிற்சாலைகளான காங்கேசன்துறையிலுள்ள சீமெந்து தொழிற்சாலை மற்றும் பரந்தனில் உள்ள இரசாயன தொழிற்சாலை போன்ற பாரிய தொழிற்சாலைகளை மீள அமைத்தல் விரைவு படுத்தப்படும் பனைசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏனைய வேளாண்மை உற்பத்திகளான வெங்காயம்,மிளகாய் உருளைக்கிழங்கு முந்திரிகை மற்றும் மாம்பழம் போன்றவற்றை பதனிடல் போன்றவற்றில் சுய வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட பல்வேறு செயற்திட்டங்கள் இனிவரும் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படும். ஏ9 மற்றும் ஏ32 நெடுஞ்சாலைகளை திறப்பதன் மூலம் வடமாகாணத்தின் பொருளாதாரத்தை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் மீள இணைப்பதுடன் இது வடமாகாணத்தின் உற்பத்திகளின் ஏனைய மாகாணங்களுக்கான பாய்ச்சலையும் அதற்கு நேரிமையாக உயர்த்தி அதன் மூலம் வடமாகாத்திலுள்ள மக்களிற்கு புதிய வாய்ப்புக்களை உருவாக்கும். இத்தகைய

முயற்சிகளை நிறைவேற்றுவதற்கு அரசினாலும்,தனியார் முதலீட்டாளர்களாலும், அபிவிருத்தி பங்காளர்களாலும் வழங்கப்படும் நிதிகளுக்கு மேலதிக வட மாகாணத்திலிருந்து வெளிநாடுகளிற்கு சென்றவர்களிடமிருந்து அவர்களால் ஒன்று திரட்டப்பட்ட நிதியில் மற்றும் மனித மூலதனத்தை அபிவிருத்தி செயல்முறைக்கு மாற்றுவதற்காக அவர்களிடமிருந்து முதலீட்டையும் வியாபார ஆர்வத்தினையும் கவருவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படும். இத்தகைய அனைத்துநிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அழிவடைந்த வடமாகாணத்தை மீளக் கட்டிஎழுப்புவதற்கும் இழந்த சுபீட்சத்தை இந்தப் பிரதேசத்திற்கு மீளக் கொண்டு வருவதற்கும் அரசு எதிர்பார்க்கின்றது.

வளம் என்ற அடிப்படையில் நோக்குகின்ற போது

**கடல் வளம்**

யாழ். கடல்நிர் ஏரி 542 ($Km^2$)
முல்லைத்தீவு கொக்கிளாய் கடல்நீர் ஏரி 58 ($Km^2$)
நந்திக்கடல் 48 ($Km^2$)
பனிச்சங்கேணி 26 ($Km^2$)

**குளம**

இரணைமடுக்குளம் 19 ($Km^2$)
கணுக்கேணிக்குளம் 18($Km^2$)
வவுனிக்குளம் 14 ($Km^2$)


கனிப்பொருள் வளங்கள்

மயோசின் சுண்ணாம்புக்கல்
ஒட்டுசுட்டான்
காங்கேசன்துறை
வவுனியா

| காட்டுவளம் | ஹெக்ரெயரில் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 1380 |
| கிளிநொச்சி | 38728 |
| மன்னார் | 172219 |
| வவுனியா | 125207 |
| முல்லைத்தீவு | 119685 |

இவ்வள அடிப்படைகளை இனங்கண்டு அதில் அரச, தனியார் முதலீடுகளை விரிவாக்குவதன் மூலம் நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை அடைந்து வடமாகாண இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கமுடியும், இதற்கு சரியான முறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது.

இறுதி இலக்கு



உசாத்துணை

1. மத்தியவங்கி ஆண்டறிக்கைகள் 2008, 2009, 2010
2. கலாநிதி.ரி.சோமசேகரம்.
பேராசிரியர்.(திருமதி) யோகா இராசநாயகம்.
ரி.சபாரத்தினம்
- இலங்கை தேசப்பட புத்தகம்
3. பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன்
இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திப் பிரச்சனைகள் - 2010
PP-21-30

V.S.VIJAYANATHAN. B.A (HONS) (ECON)
M.phil (ECON)
Dipin Educutioon (OUSL)
Senior Lectwrer in
conomics
Acg. Director
Sri lanka Adranced Technologice
Rnstitute. Jaffna.

---

# பொதுத்துறை நிர்வாகம்
# (Public Administration)

திரு.பி.லிகோறி,
அரசறிவியல் விரிவுரையாளர்,
புதிய உயர்கலைக் கல்லூரி

பொதுத்துறை நிர்வாகம் என்றால் என்ன? அதனுடைய விளக்கம் என்ன? என்ற விடயங்களை விளக்குவதன் ஊடாக பொதுத்துறை நிர்வாகத்தை ஆராய்வதுடன், பட்டதாரி மாணவர்களுடைய கல்வி நடவடிக்கைகளுக்கு ஒரு உதவியாகவும் இக்கட்டுரை வரையறுக்கப்படுகின்றது.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் அரசியலில் இருந்து "பொதுத்துறை நிர்வாகம்" பிரித்து எடுக்கப்பட்டது. அதுவரை இரண்டும் (அரசியலும், பொதுநிர்வாகம்) ஒன்றாகவே இணைந்து காணப்பட்டது. பொதுத்துறை நிர்வாகத்தினை வேறாகப்பிரித்தெடுத்து தனியியலாக உருவாக்கியவர் வூட்றே வில்வன் (Woodrow Wiison) ஆவார். இதனால் இவர் "பொதுத்துறை நிர்வாகத்தின் தந்தை" என அழைக்கப்படுகின்றார். "பொது நிர்வாகம்" என்பது "அரசின் நிறைவேற்று" அம்சமாகும். இந்தவகையில் "நிர்வாகம்" என்ற சொல் 'Ad', 'Miniotrare' என்ற இரண்டு இலத்தின் சொற்களில இருந்து பிறந்ததாகும். இதனுடைய விளக்கம் 'Minister', or 'seive' என்பதாகும். இதனால்தான் பொது நிர்வாகிகள் 'Publi seivent' பொதுசேவையாளர் என அழைக்கப்படுகின்றார்கள்.

இங்கு 'நிர்வாகம்' (Administration) என்பது பணி செய்தல், மேலாண்மை செய்தல், பேணிப்பாதுகாத்தல் என்ற பொருள்படுகின்றது. எனவே 'நிர்வாகம்' என்ற சொல் மக்களுக்கு பணிசெய்தல், மக்கள் நலனைப் பேணிப் பாதுகாத்தல், மக்களை மேலாண்மை செய்தல் என்பதைக் குறிக்கின்றது. இவ் மக்கள் நலனைப் பேணிப்பாதுகாக்கக் கூடிய பொறுப்பை தனியார் நிறுவனங்களும் வகிக்கலாம், அரச நிறுவனங்களும் வகிக்கலாம். மக்கள் நலனைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பை தனியார் நிறுவனங்கள் வகிக்கும்பொழுது அதனைத் தனியார் நிர்வாகம் என்றும்,மக்கள் நலனைப் பேணிப்பாதுகாக்கும் பொறுப்பை பொது நிர்வாகங்கள் வகிக்கும்போது அதைப் பொது நிர்வாகம் என்றும் அழைக்கின்றோம். இதில் அரசு மேற்கொள்ளும் சேவையே மேலானது. இங்கு அரசு என்பது இயங்கும் தன்மையற்றதாக இருப்பதனால் அதனுடைய அரசாங்கம் என்ற நிறுவனத்தினுடைய மூன்று நிறுவனங்களான சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பவற்றினூடாக செயற்படுகின்றது. சட்டத்துறையானது கொள்கைகளையும் சட்டங்களையும் இயற்ற நிர்வாகத்துறை இக்கொள்கைகளையும் சட்டங்களையும் நடைமுறைப்படுத்த நீதித்துறை சட்டங்களுக்கு விளக்கமளித்து நீதிவழங்குவதையும் மேற்கொள்கின்றது.

இதனால் தான் LD (White) என்பவன் "பொதுமக்களின் நலன்களை முன்னிட்டு, சட்டமன்றம் இயற்றிய சட்டங்களை நிறைவேற்றுவதற்காக, நிர்வாகத்துறை மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளும் பொதுத்துறை நிர்வாகமாகும்" என்றார்.

வூட்றே வில்சன் "சட்டங்களை முறையாகவும், விளக்கமாகவம் நிறைவேற்றும் செயற்பாடுகளே பொதுத்துறை நிர்வாகமாகும்" என்று குறிப்பிட்டார்.

இவ்வாறு பொதுத்துறை நிர்வாகத்தின் பரம்பெல்லையைப் பற்றி பல வல்லுநர்கள் பல விளக்கத்தை வழங்கியுள்ள போதிலும் லூதர் குலிக் (Luther Gulick) என்பவரே பொதுநிர்வாகப் பரம்பெல்லையில் அடங்கக் கூடிய விடயங்களை 'POSDCORB" என்ற சொற்றொடரின் மூலம் விளக்கியுள்ளார். இந்த சொற்றொடரில் உள்ள ஒவ்வொரு ஆங்கில எழுத்தும் ஒரு குறிப்பிட்ட பொருளை கொடுத்து பொதுத்துறை நிர்வாகத்தை தெளிவாக விளக்கியுள்ளார். அதன்படி

P என்ற எழுத்து (Planning) திட்டமிடல் என்ற சொல்லைக் குறிக்கின்றது. அதாவது

அரச நிறுவனங்கள் என்ன செயலைச் செய்ய முற்படும்போது திட்டமிடல் அவசியமாகும். எனவே பொதுத்துறை நிர்வாகத்துக்கு திட்டமிடலே மூலகாரணமாகும். சிறந்த திட்டமிடலின் ஊடாகவே சிறந்த நிர்வாகத்தைப் பெறமுடியும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

O என்ற எழுத்து (Orgnisation) ஒழுங்கமைத்தல் என்பதைக் குறிக்கின்றது. அதாவது பொதுத்துறை நிர்வாகத்தை ஒழுங்கமைப்பதற்கு எத்தகைய நிறுவன அமைப்புக்களை உருவாகுதல் வேண்டும், எந்த அடிப்படையில் உருவாக்க வேண்டும், எந்த கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்க வேண்டும் என்பவற்றைச் சுட்டிக்காட்டுகின்றது.

S என்ற எழுத்து ஊழியர்களை நியமனம் செய்தல் (Staffing) என்பதைச் சுட்டிகாட்டுகின்றது. அதாவது பொதுத்துறை நிர்வாகத்தை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும், திறம்படச் செயலாற்றுவதற்கும் வினைத்திறன் கொண்ட ஆளணியினரை தெரிவு செய்தல் அவசியமாகும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் ஆளணியினருக்கு எவ்விதமான பயிற்சி வழங்க வேண்டும் அவர்களுடைய பதவி உயர்வு எந்த அடிப்படையில் அமைய வேண்டும். அவர்களின் இடமாற்றம் எந்த விதிமுறையின் கீழ் அமைதல் வேண்டும். இவர்களுக்குரிய விதிமுறைகள் ஒழுங்காற்று நடவடிக்கைகள் பற்றி இச்சொல் ஆராய்கின்றது.

D என்ற எழுத்து வழி நடத்தல் (Difection) என்ற சொல்லைக் குறிக்கின்றது. பொதுத்துறை நிர்வாகத்தில் மிகவம் முக்கியமான சொல்லாகும். அதாவது அரசாங்க அதிகாரிகள் தங்களுக்குக் கீழே பணிபுரியும் நபர்களை சிறந்த முறையில் வழிகாட்டி நிறுவனத்தின் இலக்கை அடைவதைக் குறித்து நிற்கின்றது.

Co என்ற எழுத்துக்கள் ஒருங்கிணைத்தல் (Co-ordination) என்ற சொல்லைக் குறித்து நிற்கின்றது. அதாவது பல்வேறு நிலைகளில் பணிபுரியக் கூடிய அதிகாரிகள் தங்களுக்குக் கீழே பணிபுரியும் நபர்களின் பணிகளை ஒருங்கிணைத்து செயற்பட வைப்பதையும் நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பினையும் ஏற்படுத்தி சிறந்த நிர்வாகம் ஏற்பட வழிவகுப்பதையும் குறிக்கின்றது.

R என்ற சொல் அறிக்கையிடல் (Reporting) என்ற சொல்லைக் குறிக்கின்றது.அதாவது அரச பணியாளர்கள் நாளாந்தம் தாம் மேற்கொள்ளும வேலைகளை மேலதிகாரிகளுக்கு அறிக்கையாகச் சமர்ப்பித்தல் வேண்டும். (இச்செயற்பாட்டினைச் சிறப்பாக அரசு சார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகத்தில் காணலாம்) இவ்வறிக்கைகளின் குறைநிறைகளை அலசி ஆராய்ந்து சிறந்த நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு இவ் அறிக்கையிடல் மிக முக்கியமானதாகும்.

B என்ற எழுத்து வரவு செலவுத்திட்டம் (Budjeting) என்ற சொல்லை சுட்டிக்காட்டுகின்றது. அதாவது எந்த ஒரு நிர்வாகமும் செயற்படுவதற்கு நிதி அவசியமாகும். நிதியின்றி எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளமுடியாது என்பது தெளிவாகும். அதனால்தான் ஒவ்வொரு நாட்டிலும் வரவு செலவுத்திட்டம் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது. வரவுசெலவுத்திட்டம் தோல்வியடைகின்றபோது அரசாங்கம் வீழ்ச்சியடைவதைக்காணலாம்.

இவ்வாறு "Poodcorb" என்ற சொல்லினூடாக லூதர் குலிக் பொதுத்துறை நிர்வாகத்தைத் தெளிவாக விளக்கினார். இருப்பினும் இக்கருத்துக்கள் 1960 ஆம் ஆண்டுவரைதான் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. 1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொதுத்துறை நிர்வாகத்தின் பரம்பெல்லையில் கொள்கைப்பகுப்பாய்வு, வளர்ச்சி நிர்வாகம், ஒப்பியல் பொது நிர்வாகம், பன்னாட்டு பொதுநிர்வாகம், சூழல் பொது நிர்வாகம் என்ற புதிய பகுதிகளும் இணைத்துக்கொள்ளப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளமையைக் காணலாம்.

எனவே இன்றைய நவீன அரசுகளில் மனிதனின் அடிப்படைத் தேவைகளும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. காரணம் அரசறிவியல் முன்னேற்றம், தொழில் புரட்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, சனத்தொகை அதிகரிப்பு என்பன காரணமாக மக்களின் விருப்பு வெறுப்புக்களும் நாட்டங்களும் அதிகரித்துள்ள இவ்வேளையில் அவற்றை நிறைவு செய்யும் வகையில் தற்கால அரசுகள் மக்களின் சமூகபொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்கும் பாரிய

கடமையினைப் பெற்றுள்ளது. ஆகவேதான் நவீன அரசுகள் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப பொதுநல அரசாக (Welfare state) மாறியுள்ளது.

இவ்வரசுகள் மக்களைப் பாதுகாத்து அவர்களின் விருப்பு வெறுப்புக்களை நிறைவு செய்து கொள்வதில் அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பையும் உதவியையும் அரசு கொடுக்கவேண்டியுள்ளது. இதனால் மனிதனின் வாழ்க்கை மீது அரசு செலுத்தும் கட்டுப்பாடும் ஒழுங்குமுறையும் அதிகரித்து வருகின்றன. எமது அன்றாட வாழ்வில் அக்கறை செலுத்தாத அரசாங்க அமைப்புக்களும் மனிதனின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தாத அரசாங்க விதிகளும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகளும் இல்லையென்னும் வகையில இன்றைய அரசின செயல்கள் அதிகரித்துள்ளன. அரசாங்கத்தின் செயல்களின் பரப்பு விரிவடைய விரிவடைய மக்களது வாழ்க்கையில் பொதுத்துறை நிர்வாகம் பெரும்பங்கு மிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

மக்களின் விருப்பங்களையும், நாட்டின் தேவைகளையும் நிறைவுசெய்யும் வகையாக அரசு வகுக்கும் கொள்கைகளையும், திட்டங்களையும் வேறுபல விடயங்களையும் நடைமுறையாக்கும் பொறுப்பு பொதுநிர்வாகத்தைச் சார்ந்ததாகவுள்ளது. அரசின் கொள்கைகளை செயற்படுத்தும் ஆட்சியமைப்பு விரைவுடனும், செயல்நிறைவுடனும் நேர்மையுடனும் செயலாற்றாது போகும்போது அரசின் நல்ல திட்டங்களும் சட்டங்களும் கொள்கைகளை பயனற்றதாக்கிவிடும். எனவே செயல்திறன் கொண்ட பல நிறுவனங்களையும் அமைப்புக்களையும் இன்றைய அரசு கொண்டுள்ளன. இதனால்தான் இவ்வரசுகள் நிர்வாக, அரசுகளாக (Administrative state) களாக மாறியுள்ளன.

ஆகவே, அரசாங்கத்தின் முப்பெருந்துறைகளான நீதி, நிர்வாகம், சட்டம் போன்றவை மேற்கொள்ளும் செயல்கள் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அரசாங்கம் மேற்கொள்வதைப் பொதுத்துறை நிர்வாகம் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனால் இத்துறைக்குள்ள உத்தியோகத்தர்கள் தம் இயக்கம், மேற்பார்வை, கட்டுப்பாடு ஆகியவற்றுக்குட்பட்ட நிரந்தர நிர்வாக உத்தியோகத்தர்கள் மூலம் அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றார். இந்த நிரந்தர நிர்வாக உத்தியோகத்தர்கள் தாம் பதவியிலிருந்து ஓய்வுபெறும்வரை இருப்பார்கள். இவர்கள் நேரடியாகக் கொள்கை ஆக்கத்தில் தொடர்புபடாவிட்டாலும் மறைமுகமாக பொதுக்கொள்கைகளை வகுப்பதிலும், சட்டம் தயாரிப்பதிலும் அதிகார அனுமதி பெற்ற சட்டங்களை இயற்றுவதிலும் பெரும் பங்கேற்கின்றனர். இவர்களின் மூலமாகவே அரசாங்கத்தின் இப்பெரும் பிரிவுகளின் சட்டதிட்டங்களும் கொள்கைகளம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனவே அரசு ஒனறின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு பொதுத்துறை சார்ந்த நிர்வாகிகளே முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் பொதுத்துறை நிர்வாகம் ஒரு அரசின் முக்கிய கூறாகக் காணப்படுகின்றது எனலாம்.

# காலத்தின் பதிவுகள்







ஆசிரியர்தினம்




கலாதரிசன வெளியீடு



புத்தகக் கண்காட்சி நூல்வெளியீடு



கலாதரிசன வெளியீடு





முதுகலைமாணி கால்கோள்

# கல்விசார் உசாத்துணைத் தகவல் வளங்கள்-சில பதிவுகள்

மு.சின்னராசா,
விரிவுரையாளர்,
புதிய உயர் கல்லூரி.
உதவிப் பதிவாளர்/நூலகம்
யாழ் பல்கலைக்கழகம

நூல்களைச் சேகரித்துப் பாதுகாத்து வைத்தல் என்ற நோக்கத்துடன் தொடங்கிய நூலகமும் அதன் பணிகளும் இன்றைய நவீன -விஞ்ஞான தொழில நுட்ப யுகத்தில் நூலகம் பற்றிய கருத்துக்கள் முற்றிலும் மாற்றமடைகின்றன. பல்வேறு வடிவங்களிலும் பதிவுகளிலும் வருகின்ற தகவல்வழங்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தி பாதுகாத்தும் தகவல் வளங்களைத் தேடுபவர்களுக்குச் சரியான தகவல்களை விரைந்து வழங்க வேண்டிய பணிகளை ஆற்றிவருகின்றன. இன்றைய நூலகங்கள் தகவல் வள நிலையங்களாக மாறியுள்ளன. தகவலைத் தேடிவருபவர்க்கு என்ற நிலைமாறி ஒவ்வொருவருக்கும் தகவல் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பணியாற்ற வேண்டியுள்ளது. உதாரணமாக ஒரு தகவலைத் தேடும் ஆராய்ச்சியாளருக்குத் தேவையான பொருட்துறை சார்ந்த விடயங்களைப் பல்வேறு தகவல் வளங்களிலிருந்து திரட்டி குறிப்பிட்ட ஆராய்ச்சியாளருக்கு வழங்குதல்.

"நூலகங்கள் கற்றல் வளநிலையங்கள்" கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான அனைத்து வளங்களையும் கொண்டவையாக இருக்கும்போதே நிறைவான பணிகளை ஆற்றமுடியும். எனவே ஒவ்வொரு நூலகங்களும் பொருத்தமான தகவல் வளங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது அவசியமானதாகும்.

**தகவல்**

**அறிமுகம்**

பரந்த ரீதியில் நோக்கும்போது எந்த ஒரு அனுபவத்திற்கும் அர்த்தம் சேர்ப்பது அல்லது நிகழ்வு, வாழ்வு அனுபவம் என்பற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவது தகவல் எனப்படுகின்றது. சூழலுடன் தொடர்புள்ள சூழலைச் சரிசெய்துகொள்ள சூழலை உருவாக்கத் தகவல் மிக அவசியமானது நிகழ்வின் அனுபவங்கள் மக்கள் இடங்கள் போன்ற அனைத்துமே தகவலை வழங்குகின்றன. மனித ஆற்றலும் அறிவும் பலதரப்படுவது போன்ற தகவலும் பரந்துபட்ட எல்லா மனித சமூகத்தில் முக்கிய பங்கு ஆற்றுவதோடு அண்மைக்காலங்களில் முக்கியமான ஒன்றாகவும் மாறிவிட்டது.

**வரைவிலக்கணம்**

1971 இல் வெளியான வெப்ஸ்ரர் அகராதி (Webster 1971) பின்வருமாறு கூறுவது "அடுத்தவர்களுடன் தொடர்புகொள்வதன் ஊடாகவோ அல்லது பரிசோதனை படிப்பு அறிவுறத்தல் என்பனவற்றின் ஊடாகப் பெறப்படும் குறிப்பிட்ட நிகழ்வு அல்லது நிலைமைகள் தொடர்பான அறிவும் தொடர்பாடலுக்கு தயார்நிலையில் உள்ள நிகழ்வுகளும். அதன் வடிவங்களும் தகவல்கள்" என வரையறை கூறுகின்றது.

தகவல் அமைப்புக்களில் வாசகருக்குப் பொருத்தமான தகவல் மூலகங்களாக உள்ள நூல்கள் மற்றும் நூலுருவற்ற சாதனங்களின் தொகுதி தகவல் வழங்கல் எனப்படுகின்றன.

கற்காலம் முதல் தற்காலம் வரை பல்வேறு தகவல் வளங்கள் பதிவேடுகளாகவும் செவிவழித் தகவல்களாகவும் உருவாக்கம் பெற்றன. இவை யாவுமே மனித தேவைக்கும் தேடலுக்குமான தகவல்களை தன்னகத்தே கொண்டிருந்தன.

தகவல் வளங்களை சாதாரண வளங்கள், உசாத்துணை வளங்கள் என வகைப்படுத்தலாம். (அறிவைப் பெறுதல், பொழுது போக்குதல், தகவலைப் பெறுதல் போன்ற தொடர்ச்சியான பாவனை கருதித் தயாரிக்கப்படும் தகவல் வழங்க சாதாரண வளங்கள் ஆகும். (தனித்துவமான தகவலைப் பெறும் நோக்குடன் காலத்திற்குக் காலம் குறிப்பெடுக்கவென வடிவமைக்கப்படும்

உசாத்துணை வளங்களுள் அடங்கும்.

இவற்றினை

01. உசாத்துணை கருவிகள்

02. நூல் தெரிவுக் கருவிகள் என இரண்டாக வகுக்கலாம்.

அகராதி கலைக்களஞ்சியம், ஆண்டு நூல்கள், ஐந்தொகுதிகள் (Almanacs), வழிகாட்டிகள், உடனடி உசாத்துணை நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், புவியியல் சாதனங்கள் போன்றவை உசாத்துணைக் கருவிகள் எனவும் நூல்விபரப்பட்டியல், வெளியீட்டாளர் பட்டியல்கள், கொள்வனவுகள், சாராம்சங்கள் போன்றவை நூல் தெரிவுக்கருவிகள் எனவும் வழங்கப்படுகின்றன. இவ்வாறான தகவல் வளங்களை ஒரு நூலகம் தன்னகத்தே கொண்டிருக்குமானால் ஓரளவு திருப்திகரமான சேவையினை வழங்க முடியும். இன்றைய தகவல் யுகத்தில் இலத்திரனியல் ஊடகங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இணையம் (Internet)தகவல் தொடர்பு வலையமைப்பில் முக்கிய பாகத்தினைப் பெற்றுக்கொள்கிறது.

**தகவல் சேமிப்பு ஊடகங்கள்**

**01. சுவரோவியங்கள்**

மொழியின் தோற்றத்திற்கு முன்னர் தமது கருத்தைத் தெரிவிக்க கையாண்ட முதலாவது முறையாக இச்சுவரோவியங்கள் விளங்கின. ஓவியங்களாகவும் குறியீடுகளாகவும் வரையப்பட்ட இவை 35000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதன் பற்றிய தகவல் களஞ்சியமாகும். இலங்கையில் சிகிரிய ஓவியம் அஜந்தா ஓவியத்திற்கு இணையானவை. (ஆதாரம். வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 9 ப.269)

**1-1. கல்வெட்டுக்கள்**

பண்டைய மனிதனின் வரலாற்று அறிவைத் தரும் முதல்நிலை தகவல் வளங்களாக கல்வெட்டுக்கள் கருதப்படுகின்றன. புராதன நாகரிகங்கள் பற்றியும், மன்னர்களின் சாதனையைப் பண்டைய மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், மத பண்பாட்டு அம்சங்களை அறிய இவை உதவுகின்றன. இந்தியாவில் அசோகன் காலக் கல்வெட்டுக்களே மிகப் பழமையானவையும் புகழ் பெற்றவையும் ஆகும்.

**1-2. களிமண் பலவகைகள்: (Clay Tablets)**

மனித சிந்தனைகளைத் சுமந்த முதலாவது நூல் களிமண் பதிவேடாகவே இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. உலகின் முதன் காவியம் என கருதப்படும் கில்கமேஷ் காவியம் (Gilgamesh Epic) களிமண் தட்டில் படைக்கப்பட்டது.

இவ்வாறு படிப்படியாக மாற்றமும் வளர்ச்சியும் கண்ட தகவல் சேகரிப்பு ஊடகங்கள் அச்சுவடிவில வெளிவரத் தொடங்கி இன்று E.Journals. E-Book என்ற நிலைக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

**02. நூலகங்கள்**

ஆராய்ச்சி நூலகங்கள்

பல்கலைக்கழக நூலகங்கள்

பாடசாலை நூலகங்கள்

பொது நூலகங்கள்

சனசமூக நிலைய நூலகங்கள்

எனப் பல்வேறு நிலைகளில் சேவை புரிகின்றன.

பாடசாலை நூலகத்தைப் பொறுத்தவரையில் அதன் தகவல் வளங்கள் வாசகர் சேவைக்காலம் போன்றவற்றில் ஏனையவற்றைவிட வேறுபடுகின்றது.

வாசகர்-மாணவர்கள் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் சேவைக்காலம்: பாடசாலை தொடங்கி முடிவடைவதுடன் தமது சேவைக் காலத்தை நிறைவு செய்கின்றன. பாசடாலை விடுமுறைக்காலங்களில் அனேகமாக மூடியே வைக்கப்படுகின்றன.

**03. தகவல் வளங்கள்**

பாடசாலை நூலகத்தின் தகவல் வள அபிவிருத்தியில் பின்வரும் அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

- மாணவர்களின் திறமை வயதிற்கு ஏற்ற தகவல் வளங்கள்.
- மாணவர்களுக்கு பயனளிக்கக் கூடிய கவிதைகள், கட்டுரைகள்,பெரியோரது வாழ்க்கை வரலாற்று நூலகள், பயணக் கதைகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் விளையாட்டு, படம் வரைதைல், இயந்திரத் தொழில்நுட்பம் தொடர்பான நூல்கள்.
- கலைக்களஞ்சியம், அகராதிகள். புவியியற் படங்கள்,கைநூல்கள்.
- நூலுரு அற்ற சாதனங்களான ஒளிப்படங்கள் கட்டில செவிப்புல சாதனஙகள்.
- இலத்திரனியல் வளங்களான கணனி இறுவட்டுக்கள், இணையத்துக்கான அணுகுகை.

**3.1. இன்றைய கல்விசார் தகவல் தேவைகள்**

- ஆசிரியர்கள் கற்றல்? கற்பித்தலுக்கான தகவல் வளத் தேவைகள்
- மாணவர்களின் அறிவுப்பசிக்குத் தேவையான வளங்கள்
- பாடத்துறை சார்ந்த தேவைகள்
- வரலாற்றுத்துறை-வாழ்க்கை வரலாறு போன்றவை அறிவதற்கான தேவைகள் பரீட்சையை நோக்கிய தேவைகள்
- பொதுத் தேவைகள் (பரீட்சை வினாத்தாள், தேசிய தொலைபேசி விபரக்கொத்து, வர்த்தமானி, சுற்றுலா வழிகாட்டி நூல்கள்)

**3.2. கல்விசார் தகவல் புலமும் அதன் விரிவும்**

தகவல் வளங்கள் அனைத்துமே கல்விச் செயற்பாட்டிற்கு பின்புலமாக இருந்துவருகின்றது. கற்றல் செயற்பாடுகளிலிருந்து அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் ஏனைய செயற்பாட்டிற்கும் தகவல் விரிவாக்கம் இன்றியமையாதது.

- மொழிக்கல்வி ஊடான கல்வி விரிவாக்கம் உதாரணம் தமிழ், ஆங்கில மொழிக்கல்வி மூலம் ஏனைய துறைசார் நிலையை அறிய உதவுதல் எடுத்துக்காட்டு மருத்துவம்:- தகவல் தொழில்நுட்பம், வரலாறு பெரியார்கள் வரலாறு.
- மாற்று வலுவுடையோருக்கான விசேட கல்வி.

அனைவருக்கும் கல்வி என்ற தத்துவத்தில் மாற்றுவலு உடையோர் தகவல்வளங்களைப் பயன்படுத்தக் கூடிய வழிகளைச் செய்வதுடன் பொருத்தமான வழங்களையும் சேகரித்தல். எடுத்துக்காட்டாக (கட்புல, செவிப்புல சாதனங்கள்)

- சமகால சூழலில் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட கற்றல் செயற்பாட்டில் பின்தங்கிய நிலையில் காணப்படும் மாணவர்களுக்கு விசேட திட்டங்களும் ஊக்குவிப்புத் திட்டங்களும் வழங்கவேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

**3.3. உசாத்துணை தகவல்களைத் தேவைகளை நிறைவு செய்யும் வழிமுறைகள்.**

- அன்பளிப்புக்கள் மூலம்.

(நலன்விரும்பிகள், எழுத்தாளர்கள், மாணவர்கள் போன்றவர்களிடமிருந்து மற்றும் அன்பளிப்புக்கள் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து Asia foundation,Save the Children போன்றன.)

- கொள்வனவு

வருடாந்தம் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகளில் தேவைகளை முதன்மைப்படுத்தும் வகையில் கொள்வனவு செய்தல்.

- பரிமாற்றம்

பாசடாலை நூலகங்களுக்கிடையில் அதிபர், ஆசிரியர்களுக்கிடையில் நூலக பணியாளர்களுக்கிடையில் மற்றும் நூலகங்களுக்கு இடையில் ஏனைய தரத்தினருக்கிடையில்.

**4. கல்விசார்தகவல் வளங்களின் சில மாதிரிகள்-பொதுப்பார்வை தகவல் வழங்கல்**

01. முதல் நிலை ஆவணங்கள்
02. இரண்டாம் நிலை ஆவணங்கள்
03. மூன்றாம் நிலை ஆவணங்கள்.

**4-1. முதல் நிலை ஆவணங்கள்**

தொடர் வெளியீடுகள் (Serials)

பருவ இதழ்கள் (Periodicals)
செய்தித் தாள்கள் (News Papers)
ஆண்டு இதழ்கள் (Annuals)
சிறப்பு மலர்கள் (Souvenirs)
செய்திக் கடிதங்கள் (News letters)
மகாநாட்டுக் குறிப்பேடுகள் (Conference Proceedings)
அறிக்கைகள் (Reports) Ex:- (Human Development Report)
ஆய்வுக் கட்டுரைகள் (Theses Dissertations)
சிறு நூல்கள் (Pamphlets)

**4-2. இரண்டாம் நிலை**

நூல்கள்
பாடநூல்கள் (Test Books)
பொழிப்புக்கள் (Treaties)
தனிப்பொருள் நூல்கள் (Monographs)
அட்டவணை( Tables)
மொழி பெயர்ப்புக்கள் (Translations)
விபரத் திரட்டுக்கள் (Profiles)

**4-3. மூன்றாம் நிலை ஆவணங்கள்**

நூல் விபரப்பட்டியல்களுக்கான நூல் விபரப்பட்டியல்கள் இலக்கியங்களுக்கான வழிகாட்டிகள் (Guide To literatures)

இத்தகைய தகவல் வளங்கள் யாவுமே நூலகத்திற்கு தேவையாயினும் அவற்றை நிறைவு செய்வது இயலாத காரியமாகவே காணப்படுகின்றது.

**4-4. உசாத்துணை நூல்கள்**

உசாத்துணை வழங்கலை அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் தகவலை நேரடியாக வழங்குபவை, தகவலுக்கு வழிகாட்டுபவை என வகைப்படுத்தலாம்.

**தகவலை நேரடியாக வழங்குபவை**

- கலைக்களஞ்சியங்கள்
  Eg:- பிரித்தானிய கலைக்களஞ்சியம்
  அமெரிக்க கலைக்களஞ்சியம்
  வாழ்வியற் கலைக்களஞ்சியம்
  அறிவியல் கலைக்களஞ்சியம்

- அகராதிகள் (Dictionaries) மொழி அகராதி
  வாழ்க்கை வரலாறு அகராதி
  பொது அகராதி
  சிறப்பு அகராதி
  தமிழ் அகராதி

- ஆண்டு நூல்கள்
  Eg:- இலங்கை ஆண்டு நூல்
  European Year Book

- வழிகாட்டிகள்
  தொலைபேசி விபரக்கொத்து
  Eg:- Kelly's Post Office London Directory

- கை நூல்கள்
  Eg:- Hand Book Of Chemistry

புள்ளிவிபரக் கை நூல்.

() புவியியல் சாதனைகள்
புவியியல் அகராதிகள்
நிலவுருவப் படங்கள்
Eg:- Sri lanka National Atlas

() வாழ்க்கை வரலாற்று நூல்கள்.
(பெரியார்கள், சாதனையாளர், ஆன்மீகவாதிகள், சிந்தனையாளர்கள், சமூகவியலாளர்கள்)

() அரச ஆவணங்கள்.
பாராளுமன்ற விவாதங்கள்
வர்த்தமானி, சட்ட அறிக்கைகள்,
வரவு செலவுத்திட்ட உரை

**தகவலுக்கு வழிகாட்டுபவை**

() நூல்விபரப் பட்டியல் (Bibliography)
Eg:- Sri lanka National Bibliography

() நூல் விபரப் பட்டியல் (Index)
Eg:- Sri lanka Periodical Index

() சராம்சங்கள் (Abstracts)
Eg:- Chemical Abstracts

**5. கல்விசார் தகவல் வளங்கள் சில மாதிரிகளும் விபரிப்பும்**

நூலக தகவல் வள நிலையங்கள் கற்றல் கற்பித்தலுக்கு தேவையான அனைத்து வளங்களையும் கொண்டவையாக இருக்கும்போது அதன் இலக்குக்களுள் நிறைவு செய்யக் கூடியதாக இருக்கும். இவற்றினை நிறைவு செய்வதற்காக பின்வரும் தகவல் வளங்களைப் நூலகங்கள் கொண்டிருப்பது சிறந்தது.

- நூல்கள்,செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் / பருவ வெளியீடுகள்
- கட்புல செவிப்புல சாதனங்கள்
- தகவல்கள் தொழில்நுட்ப சாதனங்கள்
- புள்ளிவிபரத் திணைக்கள அறிக்கைகள்
- மத்திய வங்கி ஆண்டறிக்கை வரவு செலவுத்திடம மதிப்பீட்டு அறிக்கை
- சுவரொட்டிகள்
- கையேடுகள்
- பாடசாலை வரலாற்றுச் சுவடிகள்
- புவியியல் தகவல் வளங்கள் நிலவுருப்படம் (Maps)

இவற்றுடன் பண்டைய வரலாற்று சின்னங்கள் புகைப்படங்கள், புகழ் பெற்ற ஓவியங்கள், கனிப்பொருட்கள், சிலவகைப் பூச்சிகள், அரிய மூலிகைகள், பண்டைய நாணங்கள், வெளிநாட்டு நாணயங்கள், முத்திரைகள் போன்றவற்றையும் தகவல் வளங்களுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

**5.1. இலங்கை தேசிய நூல் விபரப்பட்டியல்.**

இலங்கை தேசிய நூல் விபரப்பட்டியலின் ஆரம்ப வடிவமானது 1885 ஆம் ஆண்டின் அச்சிடுவோர், வெளியீட்டாளர், கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டநூல்கள், பருவ இதழ்கள், செய்தித்தாள்கள் போன்றவற்றின் அதிகார பூர்வ பதிவேடாக அரச வர்த்தமானியின் பகுதி 05 இல் வெளியிடப்பட்டது. தமிழ், சிங்களம், ஆங்கிலம், 3 மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.கட்டாய நூல் வைப்புச் சட்டத்தின் அடிப்படையில் பெறப்படுகின்ற

இலங்கை வெளியீடுகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. நூல்வியல்பட்டியலின் இறுதியில் இலங்கை பற்றி வெளிநாடுகளில் வெளியிடப்படுகின்ற நூல்களின் விபரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. நூலகருக்கு நூல்தேர்விற்கான சிறந்த ஆவணமாக காணப்படுகிறது.

வாழ்வியல் களஞ்சியம்

கடந்த இருபது ஆண்டுகளாக உலகில் வளர்ந்து வந்துள்ள பல்வேறு அறிவு வளர்ச்சித்துறைகளையும் உள்ளடக்கி பரந்த அளவில் இக் கலைக்களஞ்சியத்தை 14 தொகுதிகளில் வெளியிடுவதென 1983இல் திட்டமிட்டு அதன் முதலாவது தொகுதி 1986இல் வெளியிடப்பட்டது. மொழியியல், கல்வியியல், மெய்ப்பொருளியல், வரலாறு தொல்லியல், கல்வெட்டியல், உளவியல், சமூகவியல், மேலாண்மையியல், பொருளியில், வணிகவியல், நாட்டுப்புறவியல், மக்கள் தொகையியல், மானிடவியல், அரசியில். சட்டவியல், புவியியல், கவின்கலையியல் போன்ற வாழ்வியல், கூறுகளை ஆழமாகவும் மதிநுட்பத்துடனும் ஆராய்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளை உள்ளடக்கியதாக அகரவரிசை ஒழுங்கில் தரப்பட்டுள்ள அனைத்து பொருட்துறைசார் தகவல்களும் சகலமட்ட வாசர்களுக்கும் பயன்தரு தகவலாகக் காணப்படுவதால் பயனுள்ள வளமாக காணப்படுகின்றது.

**5.2. தமிழ்ச் சொல்லகராதி (கதிரவேற்பிள்ளை-மறுபதிப்பு-சென்னை: உலகத்தமிழராட்சி நிறுவனம் 1910)**

இவ் அகராதி மூன்று பகுதிகளைக் கொண்டதாக 1910, 1912, 1923 காலப்பகுதிகளின் தமிழ் சொல்லகராதி என்னும் பெயருடன் வெளிவந்த போதும் மதுரைத் தமிழ் சங்கம் வெளியிடப்பட்டமையால் தமிழ்ச்சங்க அகாராதி என்றே வழங்கியது.

சொற்பொருளுக்கு இலக்கண இலக்கிய நூல்களிலிருந்து மேற்கோள்களை வழங்கிய முதலாவது தமிழ் அகராதி என்ற சிறப்பு இவ் அகராதிக்கு உண்டு. சொல்லின் மூலம் கொடுக்கப்பட்டதுடன் முன்னைய அகராதியில் இல்லாத பல புதிய சொற்களும திருத்திய வினாக்களும் காணப்படுகின்றது.

**5.3.** Sri Lanka National Atlas (Colombo Survey Department 1988)

தான் வாழும் உலகத்தைப் பற்றி அறியும் அவாவே புவியியல் சார்ந்த தகவல்களின் தேவை அதிகரித்துச் செல்ல காரணமாயிற்று. பாவனையாளரின் அதிகரித்த வேண்டுகோளுக்கமைய புவிவியல் வளங்களைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியத்திற்கு தகவல் அமைப்புக்கள் தள்ளப்பட்டுள்ளன. இதனால் நில அளவைத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் இவ் வெளியீட்டினை நூலகங்களில் தகவல் வளங்களில் உள்ளடக்க வேண்டியது அவசியமாகும்.

142 பக்கங்களில் 59 நிலவுருவப்படங்களை உள்ளடக்கி ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுள்ள இந்த வெளியீடானது இலங்கை பற்றிய புவிசார் நிலை பற்றிய விபரங்களுக்கு மிகச் சிறந்த உசாத்துணை சாதானமாக கருதப்படுகிறது. பௌதீக வடிவமைப்பு, மக்கள், விவசாயம், கைத்தொழில் சக்தி, போக்கு வரத்து, வர்த்தகம், அரச நிர்வாகம் முக்கிய நகரங்கள் ஆகியவை தொடர்பான விபரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**5.4. கணனி மூல தகவல் வள சேவை**

ஒரு நாட்டிலுள்ள அனைத்துக் கணனி வலையமைப்புக்களும் பிற நாடுகளின் கணனி வலையமைப்புக்களும் இணைக்கப்படல் இணையம் எனப்படுகின்றது. கணனித் தொகுதி, தொலைபேசி, இணைப்பு, இணைய அட்டை, கேபிள் மற்றும் கேபிளை இணைப்பதற்கான கிளிப் என்பன இணையத்துடன் இணைந்து கொள்வதற்கு அவசியமானதாகும். E-கொமர்ஸ் எனப்படும், மின்னியல் வர்த்தகம் E-மெயில் எனப்படும் மின்னியல் தபால், வெப் எனப்படும் வலைத்தளங்கள் ஆகிய மூன்று பிரதான வசதிகளை இணையம் கொண்டிருக்கின்றது.

✢ **E. மெயில்**

கணனிப் பாவனையாளர் உள்ளூர் முறையிலோ அல்லது வலையமைப்பின் ஊடாகவோ ஏனைய கணினிப் பாவனையாளர்களுடன் தரவுகள், தகவல்கள், படங்கள், கோப்புகள்

போன்றவற்றை உடனுக்குடன் பரிமாறிக் கொள்வதற்கு அனுமதிக்கின்ற இணையச்சேவை இதுவாகும்.

***ஈ-வர்த்தகம்**

தகவல் தொழில் நுட்பத்தின் உயர்நிலை வசிக்கும் நாடுகளின் முதலீட்டின் பெரும்பகுதி இ-வர்க்கத்திற்கே செலவிடப்படுகின்றது. நூல்களோ, சீடிகளோ, நகைவகைகளோ, சாப்பாட்டு சாமான்களோ வீட்டில் இருந்தவாறே இணையத்தினூடாக வாங்கவும் விற்கவும் முடியும்.

***வலைத்தளம்**

உலகெங்குமுள்ள நிறுவனங்கள் அரச அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், தனிநபர்கள் போன்றோர் தத்தமது விபரங்களை இணையத்தளத்தில் தங்களுக்கெனத் திறந்துள்ள ஒரு பிரிவில் பதிந்து வைத்திருக்கும் பாகங்களே வலை அமைப்புக்கள் எனப்படுகின்றது. இதன் மூலம் எழுத்துருவான ஆணங்கள் மட்டுமன்றி அட்டவணைகள், படங்கள்,வரியுருக்கள் அசையும் படங்கள் ஒலி, ஒளி நிலை ஆவணங்ள் ஏனைய கணனி ஆவணங்கள் முதலிய பல்வேறு தகவல்களையும் பெறலாம்.

பலதரப்பட்ட தகவல்களை இவ்வலைத் தளங்கள் சேமித்து வைத்திருக்கின்றன.

B **இணைய சஞ்சிகை:-**

சூரியன், ஆனந்த விகடன், யூனியர் விகடன் பதிவுகள்,கல்கி, அரும்பு, மங்கையர் மலர், தாயகம் போன்றவை.

B **இணைய வானொலி:-**

உலகத்தமிழர்,தென்றல், பி.பி.சி, தமிழோசை போன்றவை.

B **இணைய நாளிதழ்கள்:-**

உதயன், வீரகேசரி, புதினம், தினக்குரல், ஈழமுரசு சுடரொளி, தினகரன், தினத்தந்தி, விடுதலை போன்றவை.

B **இணையத் தொலைக்காட்சிகள்:-**

ரி.ரி.என்.தமிழ், தீபம், சிகரம், சக்தி தொலைக்காட்சி போன்றவை.

**5.6**Ferguson's Srilanka Directory (Colombo. the Associated Newspaper Of Ceylon

ஒப்சேவர் பத்திரிகையின் பதிப்பாசிரியராக இருந்த Alistair Mackenzie Ferguson என்பவரால் *1859* ஆம் ஆண்டு Ceylon Summary Of Useful and Plantation Gazette For 1859 என்ற பெயரில் இது தொகுக்கப்பட்டது. பின்னர் Ferguson Ceylon Directory என்னும் இலங்கைக் குடியரசான பின்னர் Ferguson SriLanka Directory எனவும் பெயர் மாற்றம் பெற்றது.

இலங்கையைப் பற்றி பல்துறை சார் விடயங்களின் சுருக்கமான வரலாற்றையும், துறைசார் விபரங்களையும் தருகின்றது.

**1. பெறக் கூடிய தகவல்கள்**

B பொதுத் தகவல்களை-கலண்டர்,விடுமுறை நாட்கள், தேசிய சமய விழாக்கள், தேசிய தினங்கள்.

B இலங்கை ஆறுகள், குளங்கள், ஏரிகள், நீர்வீழ்ச்சிகள்.

B நாணயங்கள், நிறைகள், அளவைகள்.

B கடந்தகால ஆளுநர்கள், பிரதமர், அதிபர்கள் பெயரும் காலமும்.

B வரலாற்று நிகழ்வுகள்.

B அரசியல் அமைப்பின் வளர்ச்சி அரசியல் கட்சிகள் பற்றிய விபரம்.

B குடித்தொகைத் தரவுகள், மழைவீழ்ச்சி, வெப்பநிலை பற்றிய விபரங்கள்.

**2. உத்தியோக பூர்வ தகவல்கள் அரசியலமைப்பு, தூதுவர்கள் பற்றிய விபரங்கள்.**

**3. உள்ளூராட்சி தகவல்கள்.**

**4. அஞ்சல் தகவல்கள்**

**5. சுற்றுலா- முகவர் நிலையங்களின் முகவரி, விமான சேவை, ஓய்வு விடுதிகள், விருத்தினர்**

விடுதிகளின் பட்டியல்.

6. வங்கிகள்-வரலாறு, அலுவல்கள், விபரம், வங்கிகளின் முகவரி பிரதேச அலுவல்கள்.

7. வர்த்தக நிறுவனங்ளின் பட்டியல்கள்.

8. பொது நிறுவனங்களின் பட்டியல்

9. கல்விசார் நிறுவனங்களின் விபரம் (பாடசாலை, பல்கலைக்கழகங்கள் தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றவற்றின் விபரம்)

10. வர்த்தகம்.

11. கைத்தொழில் நிறுவனங்களின் முகவரி, உற்பத்திப் பொருள்.

12. விவசாயம்.

13. பெருந்தோட்டம்.

14. வெளியீட்டாளர்களின் விபரம்.

15. நபர்களின் முகவரிகள்

16. வெளியூர் முகவரிகள்.

இவ்வழிகாட்டி இலங்கை பற்றிய பயனுள்ள சரியான தகவல்களின் சுரங்கமாக உள்ளது. உரிய இடைவெளியில் புதுப்பிக்கப்படாமையினால் உசாத்துணை சாதனமாகத் தெரிவு செய்வதில் தயக்கநிலை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**நூலகர் தேடித் தெரிவு செய்ய வேண்டிய தகவல் வழங்கள்**

1.சிறப்பு மலர்கள்-பொன்விழா பவளவிழா வெள்ளிவிழா மலர்கள்.

2.மகாநாட்டு குறிப்பேடுகள் (Conference Proceeding)

3.அறிக்கைகள் (Report)

4.பல்கலைக்கழக மாணவர்கள் ஆசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகள்.

5.நினைவுப் பேருரைகள் (உ+ம் சேர்பொன் இராமநாதன் நினைவுப் பேருதை பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை, பேராசிரியர வித்தியானந்தன் நினைவுப் பேருரை).

5.பாடசாலையில் கல்விசார் உசாத்துணை வளங்களில் இன்றியமையாமை.

- ⊖ உசாத்துணை வளங்கள் பொதுவாகவே இன்றைய நவீன யுகத்தில் இன்றியமையாத ஆவணங்கள்.
- ⊖ பாடசாலையில் கல்விசார் நடவடிக்கைக்கு இன்றியமையாத தன்மை.
- ⊖ பாடத்துறைகளின் விரிவாக்கம், அலகு ரீதியான கல்விமுறை,பொது விடயங்களை அறிய வேண்டிய பரீட்சை இலக்கு.
- ⊖ நவீன கலைச்சொற்களை அறியவேண்டிய தேவை.
- ⊖ மாணவர்களின் சுயதேடலுக்கான ஊக்குவிப்பிற்கு.
- ⊖ சூழல் சார்ந்த அறிவைப் பெற்றக்கொள்ளல்.
- ⊖ பொருட்துறை சார்ந்த விடயங்களுக்கு விளக்கம் தேடிக்கொள்ளல்.
- ⊖ புவியியல் அமைவிடத்தையும், பௌதீக வளங்களையும் விளங்கிக்கொள்ளல்.

**7. கல்வித்துறை மேம்பாட்டிற்கான உத்தியாக உசாத்துணை வளங்களை இனங்காணல்.**

- ☐ ஆசிரியர் பொது அறையில் காட்சிப்படுத்தல்
- ☐ ஆசிரியர்களிடையே இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- ☐ பெறுமதியான வளங்களை நம்பிக்கையின் அடிப்படையில் கூட்டுறவு மூலம் பரிமாறல்.

**8. கல்வித்துறை வளர்ச்சிக்கான எதிர்மறைச் சூழல்.**

- ☐ போட்டி மனப்பான்மை
- ☐ கல்வி வளங்களில் பாகுபாடு
- ☐ வளங்களையும் சேவையையும் மறைத்தல்


**உசாத்துணை**

1.அகவிழி-முதலாம் ஆண்டு தொகுப்பு விழி 01 பார்வை 1-12 ஓகஸ்ட் 2004-ஓகஸ்ட் 2005. கொழும்பு அகவிழி வெளியீடு, 2004-2005.

2.அரவிந்தகுமாரி, லோ.

கல்வி அபிவிருத்தியில் நூலகங்களின் பங்கு-யாழ்ப்பாணம், பல்கலைக்கழக கல்வித்துறை, 1981-68ப.
3.அருளானந்தம், ஸ்ரீ
நூலகத் தகவல் ஆயுவுக்கோவை-கொழும்பு, சேமமடு பதிப்பகம்,2008. 296ப
4..............................
தகவல் வளங்களும் சேவைகளும்-கொழும்பு
குமரன் பதிப்பகம் 2010, 290ப.
5.இலங்கை கல்வி நூற்றாண்டு விழா மலர்- 1.-கொழும்பு,
கல்விகலாச்சார அலுவலக அமைச்சின் வெளியீடு, 1969. 904ப.
6.கமுதி:கல்வி -முகாமை-திட்டமிடல்-ஆய்விதழ்:-
தொகுதி 1 இதழ் 2 சித்திரை-ஆனி 2010.
7.சந்தானம்.எஸ்.
கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள்:சென்னை:பளனியப்பா பிரதஸ் 1985. IX, 567 ப.

**தெரிவு செய்யப்பட்ட சில இணையங்கள்**

| | |
|---|---|
| கலைக்களஞ்சியம்- | htt//www.wikipediya.org. |
| அகராதிகள் | http//www.lu.com./odlos<br>http//www.a-z-dictionaries.com<br>http//www.onelook.com |
| கலைச் சொல் அகராதி | http//www.matisse.net/files/glossary<br>http//www.glossarist.com |
| ஆண்டு நூல் | http//www.statesmansyearbook.com<br>htt//www.europaworld.com |
| ஐந்தொகை | htt//www.guinessworldrecord.com<br>htt//www.innpplace.com |
| வழிகாட்டிகள் | htt//www.worldoflearning.com<br>htt//www.inflolisting.com<br>htt//www.searchsystms.net |
| புள்ளிவிபரம் | htt//www.internetworldstats.com<br>htt//www.geohive.com |
| வாழ்க்கை வழிகாட்டி | htt//www.world'awso.com |
| புவியியல் சாதனம் | htt//www.atlapedia.com<br>htt//www.geographynetwork.com. |
| கை நூல்கள் | htt//www.handbooks.uwa.edu.au<br>htt//www.engnetbase.com |
| social science | htt//www.hwwilson.com |
| periodicals | htt//www.journalseek.com<br>htt//www.pio.chadwyck.co.uk |
| abstract | htt//www.abstracts.com |









